விலை: 30.00
பக்கங்கள் : 12 + 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 056 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 01 ஞாயிற்றுக்கிழமை (13.02.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## சர்வதேசம் இலங்கையில் தலையிட முடியாது

# அரசியல் கைதிகள் விவகாரத்தில்

# ஐ.நா தலையிட இடமளியோம்



## அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் கைதிகள் விவகாரத்தில் ஐ.நா தலையிட அரசாங்கம் இடமளிக்காது என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும் சர்வதேசம் இலங்கை விவகாரத்தில் தலையிட முடியாது எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வினை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், சிறைக் கைதி 11

## 'கனிய மணல்' போர்வையில் தமிழரின் நிலம் அபகரிப்பு

### கொக்கிளாயில் போராட்டம்



03 ஆம் பக்கம் பார்க்க

## பசில் ராஜபக்ஷ நன்றி மறந்தவர் அவருடன் பேசக்கூட விருப்பமில்லை

### முருத்தெட்டுவே ஆனந்த தேரர் சீற்றம்



(கொழும்பு)

ராஜபக்ஷ குடும்பத்தில் நன்றியை மறக்காத ஒரே நபர் மகிந்த ராஜபக்ஷ எனவும் பசில் ராஜபக்ஷ செய்நன்றி மறந்தவர் என்பதால், அவரை பற்றி பேசுவதற்குக்கூட விரும்ப 11

## கொரோனா 23 பேர் பலி

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி மேலும் 23 பேர் உயிரிழந்துள்ள 11

எதிர்வரும் 19, 20, 21ஆம் திகதிகளில்

## வட மாகாணத்தில் கனமழைக்கு வாய்ப்பு

### மழை இன்றும் தொடரலாம்

(யாழ்ப்பாணம்)

வடகிழக்கு பருவக்காற்றின் தாக்கத் 11

நாட்டில் மேலும்

## +1,162 பேருக்கு தொற்று

(கொழும்பு)

நாட்டில் நேற்று மேலும் 1,162 பேருக்கு 11

## பொருளாதார நெருக்கடிக்கு நிலையான தீர்வு வேண்டும்

### அரசியல் கட்சித் தலைவர்கள் கூட்டாக விசேட அறிக்கை

(கொழும்பு)

நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிக்கு உடனடியாக நிரந்தர தீர்வை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசியல் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் விசேட கூட்டறிக்கையை நேற்று வெளியிட்டுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன், அரச பங்காளிக் கட்சியான லங்கா சமசமா 11

## அராலியில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, அராலி செட்டியார் மடம் சந்தியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் விசுவமடுவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அவருடன் பயணித்த மற்றைய இளைஞன்படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை 11

## கோட்டாபய அரசு சர்வாதிகார ஆட்சிக்கு செல்லும் முயற்சி

(கொழும்பு)

சுகாதார சேவையை அத்தியாவசிய சேவையாக பிரகடனப் படுத்தி, வெளியிடப்பட்ட வர்த்தமானி, நாட்டில் மீண்டும் ஜே.ஆரின் சர்வாதி 11

## பயங்கரவாத சட்டத்தை முழுமையாக நீக்க வலியுறுத்தி

### கொழும்பில் களமிறங்கவுள்ள கூட்டமைப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நீக்குமாறு வலியுறுத்திகொழும்பிலும்கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு களமிறங்கவுள்ளது.

இதன்படி எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாகக் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை நிற கழுகுடன் ஒருவர் கைது



புத்தளம்- பாலாவி 2ஆம் கட்டைப் பகுதியில் சட்டவிரோதமாக வளர்க்கப்பட்ட அரிய வகை வெள்ளை நிறக் கழுகுடன் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின்போதே ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த அரிய வகை வெள்ளை நிறக் கழுகு (WHITE BELLIED SEA EAGLE ) HALIEE TUS LEUCOGWTER இனத்தைச் சார்ந்தது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த அரிய வகை வெள்ளை நிறக் கழுகுவிற்பனை செய்வதற்காக வளர்க்கப்பட்டு வந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.(ம)

## வீடு வாடகைக்கு

கொக்குவிலில் வீடு வாடகைக்கு உண்டு. (C-3764)

074 243 4587

## விற்பனைக்கு

மாடு. ஆடு(சணல்). கோழி என்பன உடன் விற்பனைக்கு உண்டு. (10170)

077 978 9375

## ENGLISH CLASSES

Group classes for Gr.10,11, A/L, University students & govt. staff. Home visit within municipal limits by experienced graduate English teacher. (10167)

077 640 1722 | 070 640 1733

## மணமகன் தேவை

பிறப்பு 1992 இந்து
நட்சத்திரம் : சதயம் லக்/குரு
ஒழுக்கமுடைய பெண்
இடம்: சிவியா தெரு, அரியாலை
வெளிநாடு விரும்பத்தக்கது. (10157)

076 020 5469

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (10056)

☎-070 640 5951
e-mail : engchelvam@gmail.com

## காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாயில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (10152)

ஒரு பரப்பு பத்து இலட்சம்.

076 778 8273

10வருட வெற்றிகரமான சேவையில். FEB/2022

## U.K மற்றும் கனடாவில் உயர்கல்வி

(C-3765)

குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

எமது வீசா ஆலோசனை வாயிலாக UK, கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிட முடியும்

நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற...

WORLD EDUCATION CONSULTANCY
அலுவலகம்: புதிய உயர் கல்லூரி வளாகம் ஆரியகுளம் யாழ்ப்பாணம்.
கிளை: சங்கத்தானை சாவகச்சேரி.
0779265447 / 0217200989

## தென்னந்தோட்டங்கள் விற்பனைக்கு

எழுதுமட்டுவாள் A9 வீதியிலிருந்து 1 1/2 Km தூரத்தில் 15 ஏக்கர், மேலும் எமக்கு சொந்தமான வேறு காணிகளும் விற்பனைக்கு உண்டு. (9765)

077 653 1980
074 037 1960

## சிறுநீரகம் தேவை

59 வயதான நபருக்கு O+ குருதி வகை உடைய சிறுநீரகம் தேவை. (C-3766)

0778191636
0774400094

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள் (10169)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## விரைவு பொதிகள் சேவை

DHL வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன.



Lanka Cargo Worldwide Express
இல. 315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C-3767) 076 283 2397

## விற்பனைக்கு

பிளீச்சிங் பவுடர் (குளோரின்) விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு (10158)
077 755 9717 (ஜீவா)

# மரண அறிவித்தல்



பிறப்பு 25 - 06 - 1923

இறப்பு 12 - 02 - 2022

## உயர்திரு இளையதம்பி இராசையா

துன்னாலையைப் பிறப்பிடமாகவும் அல்வாய் வடமத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட உயர்திரு இளையதம்பி இராசையா அவர்கள் நேற்று (12.02.2022) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னம்மா, முத்துச்சாமி, கோவிந்தசாமி, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பவளம் அவர்களின் அன்புக் கணவரும் குகராணி, குகதாஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பேரின்பம், சியாமளா ஆகியோரின் அன்பு மாமனாரும் நிஷாந்தன், நிஷாந்தினி, நிதர்ஷன், நிகேதன், நிதர்ஷினி, நிகேதினி, நிதர்மினி, கஜனி, சர்விகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் கேதுர்சன், தட்சயன், ஆர்கவி, தமிழிசை, துபிர்சன் ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.02.2022) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கொத்தியவத்தை, அல்வாய் வடமத்தி, அல்வாய்.
077 452 9015
077 057 6530
தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## திரு. நாகர் ஞானசேகரம்

கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. நாகர் ஞானசேகரம் நேற்று முன்தினம் (11.02.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகர் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, ஞானபண்டிதர், தங்கம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஜெசோதரன், ஜெயன்டிதன், சர்வேஸ்வரன், காலஞ்சென்ற சத்தியேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜிகலா, சசிரேகா ஆகியோரின் அன்பு மாமனாரும் மகிஷா, ஆகாஷினி, லுக்கேஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.02.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (10171)

கட்டப்பிராய் லேன், கோப்பாய்.
077 618 4401
தகவல் :- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனிய மணல் அகழ்வு எனும் போர்வையில் தமிழ் மக்களின் நிலங்களை ஆக்கிரமிக்காதே

## நில அபகரிப்பிற்கு எதிராக கொக்கிளாயில் போராட்டம்

(பனிக்கன்குளம்)

**முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் தொடக்கம் நாயாறு வரையான கிராமங்களில் சுமார் 1000 ஏக்கர் பூர்வீக நிலங்கள் கனிய மணல் அகழ்வு என்ற பெயரில் அபகரிக்க நடவடிக்கைகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றதாகவும் இதனை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு கோரிய கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.**



ஏற்கனவே சிங்கள குடியேற்றங்களாலும், இராணுவ ஆக்கிரமிப்பாலும் மகாவலி எல் வலயத்தாலும், வன ஜீவராசிகள் திணைக்களம், வளவள திணைக்களம், தொல்லியல் திணைக்களம், போன்ற அரச இயந்திரங்களின் திட்டமிட்ட ஆக்கிரமிப் பால் இருப்பு கேள்விக்குள்ளாகி வரும் தமிழ் மக்களின் எல்லை கிராமங்களில் மேலதிகமாக கனிய மணல் கூட்டுதாபனத்துக்கு என மிகுதி நிலங்களையும் அபகரிக்கும் வேலையை அரசு மிக திட்டமிட்டு முன்னெடுத்து வருகின்றது.

எனவே தமிழ் மக்களுக்கு சொந்தமான இந்த நிலங்களை அபகரிப்பதை கண்டித்தும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் கொக்கிளாய் கிராம மக்களால் நேற்று சனிக்கிழமை எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் எமது நிலமே எமது உரிமை, கொக்கிளாய் எமது பூர்வீகம், கனிய மணல் அகழ்வு எனும் போர்வையில் காணி பறிக்கவா இந்தத் திட்டம், நிலமிழந்து போனால் பலமிழந்து போவோம், வளங்களை சுரண்டி விட்டு எங்கள் நிலங்களை பறிக்கவா இந்த நாடகம் போன்ற கோசங்களை தாங்கிய பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கொக்கிளாய் கிராம மக்கள் முன்னெடுக்கும் குறித்த போராட்டத்தில் மக்களுடன் இணைந்து மத தலைவர்கள் அரசியல் பிரமுகர்கள் சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (நி-4-281)

# யாழ்.போதனாவில் மீண்டும் இரத்தத் தட்டுப்பாடு


## குருதிக் கொடையாளர்களுக்கு அழைப்பு

(குப்பிழான்)

யாழ்.போதனா மருத்துவமனையின் இரத்த வங்கியில் குருதிக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் இது ஆபத்தான நிலை எனவும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்தவங்கிப் பிரிவினர் தெரிவித்தனர்.

நாளொன்றுக்கு 35-40 பைந்த் குருதி தேவையான நிலையில் மிகக் குறைந்தளவு குருதியே கையி ருப்பில் உள்ளது எனவும் தெரிவித்தனர்.

ஆகவே, இந்த இக்கட்டான நேரத்தில் மக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கப்படுகிறது.



குழுவாகவோ அல்லது தனியாகவோ இரத்ததானம் செய்வதற்கு ஆயத்தமாக இருந்தால் 0772105375 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டால் அதற்கான ஏற்பாடுகள் செய்து தரப்படும் என இரத்த வங்கி பிரிவினர் அறிவித்துள்ளனர். (5-4-18)

# மாலைதீவு பிரஜைக்கு ஆயுள் தண்டனை விதித்த இலங்கை நீதிமன்றம்

(கொழும்பு)

மாலைதீவு பிரஜை ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது. குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த தீர்ப்பு அளிக்கப்பட்டது.

265 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த குற்றத்துக்காக லத்தீப் இஷ்ஃன் என்பவருக்கே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வழக்கினை விசாரித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி இந்த தண்டனையை விதித்துள்ளார். மேலும், மேற்படி நபருடன் கைதான மற்றுமொரு சந்தேகநபரை நிரபராதியாக கருதி விடுவிக்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம், பம்பலப்பிட்டி பகுதியில் வைத்து சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மரண அறிவித்தல்

## சின்னப்பு சண்முகராசா



யாழ்.கோண்டாவில்லைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும்கொண்ட சின்னப்பு சண்முகராசா அவர்கள் 09-02-2022 புதன் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார், காலஞ்சென்ற சின்னப்பு, பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், கந்தையா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ரவீந்திரராணி அவர்களின் அன்புக் கணவரும், சசிகலா (சுவிஸ்), மதியழகன் (கண்ணன்-கனடா), சர்மிளா (கனடா), அன்பரசன் (கமல்- கனடா), வாசுகி (பிரான்ஸ்), சுசித்தா (டென்மார்க்), விஜித்தா (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேவராஜா (தாசன்- சுவிஸ்), துஷி (கனடா), தயாபரன் (கனடா), கஸ்தூரி (கனடா), தனேஸ் (பிரான்ஸ்), பிரதீப் (டென்மார்க்), சஞ்சீவன் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், விஸ்வலிங்கம், பரிமளம், செல்வராணி, தங்கராணி, தங்கராசா ஆகியோரின் அன்புச்சகோதரரும், நவரட்ணம், விமலராணி, விஜயராணி, வசந்தமாலா (ஜேர்மனி), ராசன் (ஜேர்மனி), ராஜலக்சுமி, அப்புலிங்கம், பரமகுரு, சண்முகலிங்கம், சரோசாதேவி, யோகமலர், மாம்பழம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவம் (ஜேர்மனி), பாலசுப்ரமணியம், நாகேந்திரம் ஆகியோரின் அன்புச் சகலனும், கிருஷாந், எஷான், ஜசா, அஸ்வினி, பவிக்ஷன், சுகேஷ், பிரபின், அஸ்மிதா, அஸ்வின், மயூசன், மயூசனா, ஜானு, ரியானா, அபினா, ஷியானா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14-02-2022நாளை திங்கட் கிழமை மு.ப.11:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

[illegible] கோண்டாவில் கிழக்கு, யாழ்ப்பாணம். 0774177419

தகவல் குடும்பத்தினர். (10159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிரான இருபதுக்கு-20 அவுஸ்திரேலியா வெற்றி



இலங்கை அணிக்கு எதிரான இருபதுக்கு - 20 தொடரின் முதல் போட்டியில் அவுஸ்திரேலிய அணி டக்வேர்த் லூயிஸ் முறையில் 20 ஓட்டங்களால் வெற்றிபெற்று 5 போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என முன்னிலை பெற்றுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி அங்கு 5 போட்டிகள்கொண்ட இருபதுக்கு - 20 தொடரில் பங்கேற்று விளையாடி வருகின்றது.

இதன் முதல் போட்டி அவுஸ்திரேலியாவின் சிட்னியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.


இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

அவுஸ்திரேலிய அணி சார்பாக துடுப்பாட்டத்தில் பென் மக்டிரமென்ட் 53 ஓட்டங்களையும் மார்க்கஸ் ஸ்டெய்னிஸ் 30 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர்.

இலங்கை அணி சார்பில் பந்து வீச்சில் வனிந்து ஹசரங்க 3 விக்கெட்டுகளையும் சாமிக்க கருணாரத்ன, பினுர பெர்னாண்டோ மற்றும் துஷ்மந்த சாதிர ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

இந்நிலையில், 20 ஓவர்களில் 150 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணி சீரான இடைவெளிகளில் விக்கெட்டுகளை பறிகொடுத்து ஆடிவந்த நிலையில், மழை குறுக்கிட்டதால் போட்டி 19 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டு வெற்றி இலக்காக 143 ஓட்டங்கள் வழங்கப்பட்டது.




எனினும், இலங்கை அணி வீரர்கள் துடுப்பாட்டத்தில் சோபிக்க தவறியதால் 19 ஓவர்கள் நிறைவில் 08 விக்கெட்டுக்களை இழந்து 122 ஓட்டங்களை மாத்திரம் இலங்கை அணியால் பெறமுடிந்த நிலையில் 20 ஓட்டங்களால் தோல்வியை தழுவியது.

இலங்கை அணிசார்பில் அதிகபடியாக, பெத்தும் நிஸ்ஸங்க 36 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணியின் ஜோஷ் ஹேசில்வுட் 12 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.


இதற்கமைய, அவுஸ்திரேலிய அணி 5 போடடிகள் கொண்ட இருபதுக்கு - 20 தொடரில் 1 - 0 என்ற அடிப்படையில் முன்னிலை வகிக்கின்றது. இப்போட்டியின் நாயகனாக அவுஸ்திரேலிய அணியின் அடம் ஷம்பா தெரிவு செய்யப்பட்டார். (4)


## அறிவித்தல்

தவிர்க்கமுடியாத காரணத்தினால்
சுஜீவா வைத்தியசாலை
இன்றும் நாளையும் மூடப்படும்
என்பதை
அறியத்தருகின்றேன்.

**Dr. ஜெயலன்**
077 559 4147


## மரண அறிவித்தல்



### குழந்தைவேலு வயித்திலிங்கம்

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் கைதடி தெற்கு கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு வயித்திலிங்கம் நேற்று (12.02.2022) சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான கந்தர் - நாகம்மா தம்பதியரின் மருமகனும் சிவலோஜினியின் அன்புக் கணவரும் பொன்னம்மா, தங்கம்மா, சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரனும் செல்வகதிர்காமநாதன், காலஞ்சென்ற சிவசண்முகநாதன், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் மற்றும் லீலாவதி, ஞானரூபி (சித்த போதனா வைத்தியசாலை - கைதடி) ஆகியோரின் மைத்துனரும் திவாகரன் (லண்டன்), துவாரகன் (பிராந்திய முகாமையாளர் - தேசிய லொத்தர் சபை, யாழ்ப்பாணம்), சங்கீத் (ஆசிரியர் - மன்னார் தூய ஜோசப் வாஸ் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் நந்தினி (லண்டன்), கனிந்தினி (சாயி எக்ஸ்பிரஸ்) ஆகியோரின் மாமனாரும் வேனுஷாவின் (லண்டன்) அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (14.02.2022) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி தெற்கு, 021 205 7264 தகவல்:
கைதடி. 077 992 1642 (10172) குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு 31 . 12 . 1969



இறப்பு 12 . 02 . 2022

### இராஜரட்ணம் விஜயசூரியா

(சூரி பத்தர் – மட்டுவில்)

முத்துமாரி அம்மன் கோவிலடி மட்டுவில் வடக்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோவிலடி காங்கேசன்துறை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரட்ணம் விஜயசூரியா (சூரி பத்தர்) நேற்று (12.02.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம் - விஜயலட்சுமி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காந்திமாலாவின் (காந்தி) அன்புக் கணவரும் சிந்துஜன் (Marine Engineering, CINEC), திருஷாந் (St. John's College - A/L கலைப்பிரிவு 2022), தனுப்பிரியா (யாழ். இந்து மகளிர் கல்லூரி - A/L கலைப்பிரிவு 2023) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் விஜயரட்ணம், விஜயராசன், விஜயகுமார், விஜயலதா, விஜேந்திரா, விஜயரூபி ஆகியோரின் சகோதரனும் Dr. ஜெயலனின் (சுஜீவா வைத்தியசாலை) சகலனும் கணேஸ்வரன், பாலமுருகன், பகவதி, ரஜனி, கௌசலா, றஜினா, யசோதா, Dr. சந்திரமாலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (14.02.2022) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (10173)

இல.1091, காங்கேசன்துறை வீதி, தகவல்:
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். 075 421 4529 குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உலக சனத்தொகையில் 70 சதவீதம் பேர்
# தடுப்பூசி செலுத்திக் கொண்டால் கொரோனா முடிவுக்கு வந்து விடும்

(கேப்டவுன்)

உலக மக்கள் தொகையில் 70 சதவீதம் பேருக்கு தடுப்பூசி செலுத்தப்படுமாயின், கொரோனா வைரஸின் தீவிரமான தாக்கம் இந்த ஆண்டின் நடுப்பகுதியில் முடிவுக்கு வந்துவிடும் என்று உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோரஸ் அதானோம் கெப்ரேயஸ் தெரிவித்தார். தென்னாபிரிக்காவின் கேப்டவுனில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோது அவர் இதனை தெரிவித்தார்.

உலக மக்கள் தொகையில் 70 சதவீதம் பேர் தடுப்பூசி செலுத்திக் கொண்டால் தீவிரமான கட்டம் உண்மையில் முடிவுக்கு வந்துவிடும், அதைத்தான் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இது எமது கைகளிலேயே உள்ளது. இது வாய்ப்புக்கான விடயம் அல்ல. இது தேர்வுக்கான விடயம். 70 சதவீதமானோருக்கு கொவிட் தடுப்பூசி செலுத்தி முடிக்கப்பட வேண்டும் என்ற இலக்கை, ஜூன் அல்லது ஜூலைக்குள் அடைய எதிர்பார்ப்பதாகவும், அவ்வாறு நிகழுமாயின் கொவிட் தொற்றின் தீவிர தாக்கத்தை நிச்சயமாக முடிவுக்கு கொண்டு வர முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (ரி)

## ஜெனிவா விவகாரம்
# ஐரோப்பிய நாடுகளை நாடவுள்ளார் பீரிஸ்



(கொழும்பு)

பெப்ரவரி இறுதி வாரத்தில் வெளி விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் சில ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்ய தயாராகி வருவதாக தெரியவருகிறது.

ஜெனிவா மனித பேரவையின் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படும் யோசனை சம்பந்தமாக பேச்சு வார்த்தை நடத்துவதற்காக அமைச்சர் அந்நாடுகளிடம் நேரத்தை கோரியுள்ளார்.

சில நாடுகள் இந்த கோரிக்கைக்கு சாதகமான பதிலை வழங்கியுள்ளதுடன் மேலும் சில நாடுகள் இதுவரை பதிலளிக்கவில்லை என் தெரியவருகிறது. (ரி)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
05.07.1940

மறைவு
25.01.2021

### அமரர் திருமதி தங்கம்மா ஆறுமுகம்

துவாதசி திதி 13.02.2022

ஆண்டுகள் ஒன்றானதம்மா ஆறவில்லை உன் பிரிவுத்துயர் ஐயிரு
திங்கள் எமைச் சுமந்த தாயே ஆறிரு திங்கள் துயர் சுமந்தோம் தாயே
தாயின் அன்புக்கு நிகரான அன்பு – இவ் உலகில்
இல்லையென புரிய வைத்தது உன் இழப்பு உம் உள்ளம் என்ற
சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கும் தாயே – மீண்டும் ஓர் பிறப்பாய் எம்
உள்ளே வா உன்னை ஆராதிக்க
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

(10160)

நின் ஆன்மா சுகம் பெற இறையாசி நாடும்
நின் அன்பு பிள்ளைகள்
திரு.ஆறுமுகம் குணபாலசிங்கம்
திரு.ஆறுமுகம் தனபாலசிங்கம்
திருமதி. விஜயகுமாரி சுந்தரலிங்கம் (ஜேர்மனி)
திரு.ஆறுமுகம் விஜயபாலசிங்கம் (கொலண்ட்)
திரு.ஆறுமுகம் ஜெயபாலசிங்கம்
(திடீர் மரண விசாரணை அதிகாரி)
திரு.ஆறுமுகம் இராஜபாலசிங்கம் (ஆசிரியர்)

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

## 45ம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 01.01.2022 அன்று அகால மரணமடைந்த

### குணம் கார்த்திக்

அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஓடிவந்து பல வழிகளிலும்
உதவி புரிந்த பொது அமைப்புகள், வர்த்தக சங்கத்தினர்
உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள்
அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக்
கொள்வதோடு 14.02.2022 திங்கட்கிழமை
நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில்
45 ஆம் நாள் நிகழ்வு நடைபெற இருப்பதனால்
அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின்
ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்
தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும்
கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

13ம் ஒழுங்கை,
முல்லை வீதி, பரந்தன், 076 276 6843 (10168) குடும்பத்தினர்

# இராசிபலன்

13.02.2022
மாசி 01, ஞாயிற்றுக்கிழமை
துவாதசி முன்னிரவு 7.32 மணிவரை
திருவாதிரை முற்பகல் 10.23 மணிவரை
சுபநேரம் -9.34-11.04 மணிவரை
இராகுகாலம் -5.04-6.34 மணிவரை
சந்திராஷ்டமம்- கேட்டை

வளவன்

**மேஷம்** செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிக்க முற்படுவீர்கள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** உறவினர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வாய்ப்புகள் உங்களை நாடி வரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும்.

**மிதுனம்** திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று ஏற்படலாம், இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.

**கடகம்** எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், குடும்பத்தினர்களை அனுசரித்து செல்வீர்கள், தேவையற்ற மனக்குழப்பங்கள் தவிர்ப்பது நல்லது, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**சிம்மம்** மகிழ்ச்சி தரும் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், கௌரவமான நாள்.

**கன்னி** செல்வாக்கு மேலோங்கும் நாள், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வரலாம், கனவு பலிதமுண்டு, கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**துலாம்** தடைப்பட்ட காரியங்களின் முன்னேற்றம் காணும் நாள், உறவினர் வழியில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்** வரவும், செலவும் சமமாகும் நாள், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காண வேண்டிய நாள், மனதில் இனப்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.

**தனுசு** குடும்ப நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இனிமையான அனுபவங்க் ஏற்படலாம், புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள், கௌரவமான நாள்.

**மகரம்** கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், மகிழ்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**கும்பம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மீனம்** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், எண்ணங்கள் எளிதில் கைகூடும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

உண்மையான அன்புக்காக கொஞ்ச நேரம் நடிக்கலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த சின்னங்களை உருவாக்கும் முயற்சி

# வேப்ப மரம் அகற்றப்பட்டு அரச மரம் நாட்டப்பட்டது



(பனிக்கன்குளம்)

**வடக்கையும் கிழக்கையும் இணைக்கின்ற பகுதியில் திணைக்களங்களை பயன்படுத்தி பௌத்த மத சின்னங்களையும் அடையாளங்களையும் உருவாக்கி அங்கு பௌத்த மக்களை குடியேற்றி தமிழ் மக்களது தொடர்பைத் துண்டிப்பதே இந்த அரசின் நோக்கமாக இருக்கிறது.**

வடக்கு- கிழக்கு இணைப்பு என்பதை தடுக்கும் வகையில் மாறிமாறி வரும் அரசாங்கங்கள் பல்வேறு செயற்ப்பாடுகளை முன்னெடுத்து வருகிறன.

இதன் ஒரு அங்கமாக மிகவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த முல்லைத்தீவு கொக்கிளாய் வீதியில் மணலாறு திரும்பும் சந்தியில் பௌத்த சின்னாங்களை உருவாக்கும் முயற்ச்சி இராணுவ பாதுகாப்புக்கு மத்தியில் முன்னெடுக்கப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது

அந்தவகையில் முல்லைத்தீவு கொக்கிளாய் வீதியில் மணலாறு திரும்பும் சந்தியில் இருந்த வேப்பமரம் வெட்டி அகற்றப்பட்டு அந்த இடத்தில் தற்போது அரச மரம் நாட்டப்பட்டுள்ளது.

இராணுவ ஆக்கிரமிப்புக்குள் இருக்கும் இந்த பகுதியில் எவ்வாறு இது இடம் பெற்றுள்ளது என கேள்வி எழுப்பும் மக்கள் இதுவும் திட்டமிட்ட பௌத்தமயமாக்கலின் ஒரு அங்கம் என குற்றச்சாட்டுகின்றனர்.

இந்த இடத்தில் வேம்பு மரம் இருந்ததற்கு ஆதாரமாக 2016 ஆம் ஆண்டு Google Street view புகைப்படம் இருப்பதோடு அவர்களே அந்த இடத்தை வேப்பமரசந்தி என அழைக்கின்ற நிலையில் எதிர் காலத்தில் அவ்விடத்தில் புத்தர் சிலை ஒன்றை நிறுவுவதற்கான ஏற்ப்பாடாகவே இந்த வேம்பு மரம் வெட்டப்பட்டு அரசமரம் நட்டு பராமரிக்கப்படுகிறது என குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது

அந்தச் சந்தியை சூழவுள்ள பகுதிகளில் 3 பாரிய படை முகாம்கள் கடந்த 10 வருடத்துக்கு மேலாக அமைக்கப்பட்டு அவர்களாலும் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களின் ஆதரவுடனேயே இந்த செயற்பாடு இடம் பெற்றுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (5-4-281)

## ஊடகவியலாளர் சத்தியமூர்த்தியின் 13 ஆம் ஆண்டு நினைவு தினம்



(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளா் பு.சத்தியமூர்த்தியின் 13 ஆம் ஆண்டு நினைவுதினம் நேற்று யாழ். ஊடக அமையத்தில் இடம் பெற்றது.

நினைவுதின நிகழ்வில் அவரின் உருவ படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு தீபமேற்றி மலரஞ்சலி செலுத்தப் பட்டது.

இந்நிகழ்வில் ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். (5)

## கடல் விளையாட்டுப் போட்டி


(குப்பிழான்)

மாதகல் தூய லூர்து அன்னை திருவிழாவினை முன்னிட்டு மாதகல் புனித தோமையார் ஐக்கிய விளையாட்டுக் கழகம் வருடாந்தம் நடத்தும் மாபெரும் கடல் விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் மாதகல் கடற்கரையில் நடைபெறவுள்ளது.

இதன்போது படகு ஓட்டப் போட்டி மற்றும் நீச்சல் போட்டி என்பன இடம்பெறவுள்ளன.

போட்டிகள் நிபந்தனை களற்றது என்பதுடன் படகு ஓட்டப் போட்டியில் வெளியூர் மக்களும் கலந்து கொள்ளலாம் எனவும் போட்டியின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (5-4-18)

## வடமராட்சியில் பிடிப்பட்டது முதலை



(கரணவாய்)

உடுப்பிட்டி விராச்சிக் குளம் ஜே/352 கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள வெற்றுக் காணியொன்றில் நேற்று முதலை ஒன்று வந்ததை அவதானிக்கோர் அகனை வலை போட்டு பிடித்து கயிற்றால் கட்டி வனஜீவராசிகள் துறையினருக்கு அறிவித்துள்ளனர்.

இந் நிலையில் முதலையைப் பார்ப்பத[illegible] பகுதி மக்கள் சென்[illegible]யம் (கரிப்பிடச்சக்க. (5-4-60)

## பருத்தித்துறையில் கூடிய மழைவீழ்ச்சி

(குப்பிழான்)

கடந்த வியாழக்கிழமை இரவு 8.30 மணி முதல் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை காலை 8.30 மணி வரையான 24 மணித்தியாலத்தில் யாழ்.மாவட்டத்தில் பருத்தித்துறைப் பகுதியில் கூடிய மழைவீழ்ச்சியாக 78.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் திருநெல்வேலி வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி ரி. பிரதீபன் தெரிவித்தார்.

மேற்படி காலப் பகுதியில் திருநெல்வேலியில் 60.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், அச்சுவேலியில் 58.9 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், வடமராட்சி அம்பனில் 53.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், யாழ்ப்பாணம் கோட்டை பகுதியில் 49.7 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், தெல்லிப் பழையில் 48.2 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், சாவகச் சேரியில் 40.9 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளன. (5-4-18)

## குடுவுடன் ஒருவர் கைது

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தொல்புரம் பகுதியில், 32 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் 100 மில்லிகிராம் குடுவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப் பின் போது குறித்த நபர் அவரது வீட்டிலிருந்த போது கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை. மேலதிக விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர். (5-4-104)



கனடாவில் வசிக்கும் சுரேன் என்பவரின் நிதிப்பங்களிப்பில் தென்மராட்சி சமூக மேம்பாட்டு அமையம் மற்றும் அறம் பழகு அறக்கட்டளை ஆகியவற்றின் ஊடாக நாவற்குழி 300 வீட்டுத்திட்டம் பகுதியில் அமைந்துள்ள அரும்புகள் முன்பள்ளி சிறார்களுக்கு கடந்த வியாழக்கிழமை பாதணிகள் வழங்கி வைக்கப்பட்டனர். (படம்- சுபேசன்)

## சிறுவர்களுக்கான அறநெறி வகுப்புக்கள்

(குப்பிழான்)

இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் சிறுவர்களின் ஒழுக்க, விழுமிய, ஆன்மீகப் பண்புகளை மேம்படுத்த வேண்டிய தேவை பெரிதும் உள்ளது.

இதன்பொருட்டுச் சிவகுரு ஆதீனத்தில் சிறுவர்களுக்கான வாராந்த அறநெறி வகுப்புக்கள் பிரதி ஞாயிறு தோறும் காலை9 மணி தொடக்கம் முற்பகல் 10.30 மணிவரையிலும், பிரதி வெள்ளிதோறும் மாலை 4.30 மணி தொடக்கம் பிற்பகல் 6 மணி வரையிலும் இரு பிரிவுகளாக இல-692, பருத்தித்துறை வீதி, நல்லூர் எனும் முகவரியில் இயங்கி வரும் சிவகுரு ஆதீனத்தில் நடைபெற்று வருகின்றன.

எனவே, ஆர்வலர்கள் தங்கள் பிள்ளைகளை அனுப்பி வைக்குமாறு யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு.வேலன் சுவாமிகள் கேட்டுக் கொண்டுள்ளார். (4-18)


## அல்லைப்பிட்டியில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அல் லைப்பிட்டி பகுதியில், 42 வயது டைய சந்தேக நபர் ஒருவர் 102 கிராம் கேரளக் கஞ்சாவுடன் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் கஞ்சாவுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளையே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இராணுவ புலனாய்வு பிரிவினரும் ஊர்காவற்றுறை பொலிஸாரும் இணைந்து இக் கைது நடவடிக்கையினை மேற்கொண்டனர்.



மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (5-4-33-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனங்களின் விலைகள் மேலும் அதிகரிப்பு இறக்குமதித் துறையில் பலர் வேலையிழப்பு



(கொழும்பு)

நாட்டில் வாகனங்களின் விலைகள் மேலும் அதிகரித்துள்ளதால் வாகன இறக்குமதித் துறைகளில் வேலை வாய்ப்பை சார்ந்து இருப்பவர்களில் பெரும்பாலானோர் வேலை இழந்துள்ளனர்.

உலகளாவிய கொவிட் தொற்றுநோய் பரவலை தொடர்ந்து ஏற்பட்ட டொலர் நெருக்கடி காரணமாக, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மோட்டார் வாகன இறக்குமதி நிறுத்தப்பட்டது.

வாகன இறக்குமதி நிறுத்தப்படுவதற்கு முன்னர் வருடாந்தம் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளின் மொத்த எண்ணிக்கை ஐந்து இலட்சமாகும். அதற்கமைய, 2015 - 2019 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 2.5 மில்லியனுக்கும் அதிகமான மோட்டார் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

எனினும் ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள வாகன இறக்குமதிக்கான தடை காரணமாக, வாகன சந்தையில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தற்போது, ஒவ்வொரு வாகனமும் பெறுமதியை விடவும் பல மடங்கு அதிக விலையில் விற்பனை செய்யப்படுவதால், வாகனம் வாங்குவது என்பது கனவாகவே மாறிவிட்டதாக இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வாகன இறக்குமதித் துறையில் வேலை வாய்ப்பைச் சார்ந்து இருப்பவர்களின் எண்ணிக்கை சுமார் ஒரு இலட்சமாகும். அவர்களில் பெரும்பாலானோர் வேலை இழந்துள்ளனர் என தெரியவந்துள்ளது. (நி)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா:29 சூரி 8 செவ் 5 ல்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: BSC Civil Engineer<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி<br>தொ.இ: B/12281 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்:திருகோணம்<br>கி.பா: சூரி, செவ் 12ல்<br>உயரம்:166 cm<br>தகைமை/தொழில்:O/L தையல்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/8351 |
| பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா:16 சூரி 2செவ் 3 ல்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்:போன் கடை சொந்தம்<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண் வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/12282 | பிறப்பு:1985 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா:சூரி 1 செவ் 11 ல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்:M.Eng/அவுஸ்ரேலியா<br>எதிர்பார்ப்பு:உயர் பதவி<br>தொ.இ:G/8357 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி 3<br>கி.பா :36 ¾ சூரி 8 செவ் 11 ல்<br>உயரம்:5'9"<br>தகைமை/தொழில்: Bsc IT Software<br>எதிர்பார்ப்பு:அரச தனியார் தொழில் விவாகரத்தானவர், விவாகரத்தான வரும் ஏற்றுக்கொள்ளப்படும்<br>தொ.இ: B/12283 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா: சூரி 8 செவ் 5 ல்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்:Bsc T.O அவுஸ்ரேலியா<br>எதிர்பார்ப்பு: உயர் பதவி அவுஸ்ரேலியா வரவிருப்பமுள்ளவர் விரும்பத்தக்கது.<br>தொ.இ:G/8359 |
| பிறப்பு:1991 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 3<br>கி.பா:8 சூரி 10 செவ் 12 ல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:Software Engineer (BE)Bank<br>எதிர்பார்ப்பு: தகுந்த மணமகள்<br>தொ.இ: B/12284 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா: சூரி 7 செவ் 3 ல்<br>உயரம்:153 cm<br>தகைமை/தொழில்: IT/ ஜேர்மன் குடியுரிமை<br>எதிர்பார்ப்பு:ஐரோப்பிய நாடுகள் மட்டும்<br>தொ.இ:G/8395 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொடர்ந்து சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# இனப் படுகொலையை மூடி மறைக்க கிரிக்கெட்டை பயன்படுத்தாதே
## சிட்னியில் புலம் பெயர் தமிழர்கள் போராட்டம்




(சிட்னி)

தமிழினப் படுகொலைமனித உரிமை மீறல்கள் குறித்து கவனத்தை ஈர்க்கும் வகையில் சிட்னியில் இலங்கை கிரிக்கெட் அணி பங்கேற்ற போட்டியின் போது கிரிக்கெட் மைதானத்திற்கு வெளியே அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை- அவுஸ்திரேலியாவுக்கு இடையில் 5 போட்டிகள் கொண்ட இருபது-20 போட்டித் தொடர் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை சிட்னியில் ஆரம்பமானது.

இந்நிலையில் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களுக்கு எதிரான இலங்கையின் தொடர்ச்சியான துஷ்பிரயோகங்கள் மற்றும் 2009 இல் ஆயுதப் போரின் முடிவில் பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டமை குறித்து கவனத்தை ஈர்க்கும் வகையில் போட்டி இடம்பெற்ற மைதானம் முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை அரசியலையும் விளையாட்டையும் கலக்கிறது. கிரிக்கெட்டை பயன்படுத்தி இனப்படுகொலை செய்த இராணுவத்துக்கு வெள்ளையடிக்க முயல்கிறது என போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். இதனை தெளிவுபடுத்தும் விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களையும் அவர்கள் விநியோகித்தனர்.

அவுஸ்திரேலியா மற்றும் இலங்கை அணிகள் மோதும் 20 ஓவர்கள் கொண்ட மற்றொரு போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை சிட்னி சர்வதேச கிறிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியின் போதும் மைதானத்துக்கு வெளியே இலங்கையின் இனப்படுகொலை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெறும் என அவுஸ்திரேலியா வாழ் புலம் பெயர் தமிழர்கள் அறிவித்துள்ளனர். (நி)


# இலங்கை, இந்திய அரசாங்கங்களை கண்டித்து ராமேஸ்வரம் மீனவர்கள் போராட்டம்

(சென்னை)

தமிழக மீனவர்களை கைது செய்யும் இலங்கை அரசை கண்டித்தும், தமிழக மீனவர்களின் எதிர்ப்பையும் மீறி தமிழக மீன்பிடி படகுகளை இலங்கை அரசு ஏலமிட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்காத மத்திய அரசை கண்டித்தும் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை ராமேஸ்வரம் மீனவர்கள் ரயில் நிலையம் முன்பு முற்றுகை போராட்டம் நடத்தினர்.

இதன் போது 15 நாட்களில் மீனவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படா விட்டால் தங்களது அடையாள அட்டைகளை அரசிடம் ஒப்படைக்கவும் முடிவு செய்துள்ளனர். (நி)

# விவசாயிகளின் பிரச்சினை தொடர்பில் கூடிய கவனம் செலுத்துங்கள்
## எல்லே குணவங்ச தேரர்



(கொழும்பு)

விவசாயிகள் வயலில் கால் வைத்தால் மட்டுமே நாம் உணவில் கை வைக்க முடியும் என எல்லே குணவங்ச தேரர், தெரிவித்தார்.

காமினி செனரத் ஜனாதிபதியின் செயலாளராக பதவியேற்ற பின்னர், எல்லே குணவங்ச தேரரை கொழும்பில் சந்தித்தார். அதன்போதே தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார். உங்களது நியமனம் நல்லது மக்களின் பிரச்சினை குறிப்பாக கமத் தொழிலாளர்களின் பிரச்சினை குறித்து கூடிய கவனம் செலுத்துங்கள்.

ஜனாதிபதியின், எண்ணக்கருவுக்கு அமைய நடைமுறைப்படுத்திய இரசாயன உர தடை காரணமாக சேதனப் பசளையை பயன்படுத்தும் திட்டம் காரணமாக கமத் தொழிலாளருக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் குறித்தே குணவங்ச தேரர், மறைமுகமாக ஜனாதிபதியின் செயலாளருக்கு தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் 99 சதவீதம் ஒமிக்ரோன் பரவியுள்ளது-சுகாதார மேம்பாட்டு பணியகம்

(கொழும்பு)

**நாட்டில் தற்போது 99 சதவீதம் ஒமிக்ரோன் பரவலே காணப்படுகிறது. இதிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது அவசியமாகும் என சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் ரஞ்சித் பட்டுவந்துடாவ தெரிவித்தார்.**

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஆரம்பத்தில் தனிமைப்படுத்தல் காலம் 14 நாட்களாகக் காணப்பட்டது. பின்னர் 10 நாட்களாகக் குறைக்கப்பட்டு, தற்போது 7 நாட்களாகக் குறைக்கப்பட்டுள்ளன. காரணம் தற்போது நாட்டில் 99 சதவீதம் ஒமிக்ரோன் பரவலே காணப்படுகிறது. ஒமிக்ரோன் வைரஸானது விரைவாக தொற்றி, விரைவாகக் குணமடையக் கூடியதாகும்.

ஒமிக்ரோன் தொற்றுக்குள்ளாகி 5 நாட்களின் பின்னர் தொற்றாளரிடமிருந்து அது மீள பரவாது.

எனவே தான் 7 நாட் கள் தனிமைப்படுத்தல் காலம் போதுமானதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வித தொற்று அறிகுறிகளும் இல்லையெனில் 7 நாட்களின் பின்னர் பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளை முன்னெடுக்கத் தேவையில்லை எனத் தெரிவித்தார். (ந)

## உயிரிழந்த யாசகரின் பையில் இருந்து 4 லட்சம் ரூபா பணம் மீட்பு

(கொழும்பு)

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்திலுள்ள ஹக்மன பகுதியில் திடீர் சுகயீனம் காரணமாக உயிரிழந்த யாசகர் ஒருவரிடமிருந்து பெருந்தொகையான பணம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த யாசகரின் காற்சட்டைகளிலிருந்து சுமார் 4 இலட்சம் ரூபா பணம் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹக்மன - கொங்கல பகுதியில் வாழ்ந்து வந்த 69 வயதான யாசகரிடமிருந்தே இவ்வாறு பணம் கைப்பற்றப்பட்டுள்ளது. (ந)

## மத்தள - உஸ்பெகிஸ்தான் நேரடி விமான சேவை ஆரம்பம்

(கொழும்பு)

மத்தள விமான நிலையத்திற்கும் உஸ்பெகிஸ்தானுக்கும் இடையில் நேரடி விமான சேவை ஆரம்பமாகியுள்ளது.

உஸ்பெகிஸ்தான் விமான சேவைக்கு சொந்தமான UZB 3525 என்ற விமானம் 135 சுற்றுலா பயணிகளுடன் மத்தள விமான நிலையத்தை வந்தடைந்தது.

குளிர்பருவ காலத்தில் இலங்கையை இலக்காகக் கொண்டு இந்த விமான சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ந)

## மருத்துவ சேவைகள், மின்சாரம் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனம்

### ஜனாதிபதியால் வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

மின்சார விநியோகம், மருத்துவமனை உள்ளிட்ட மேலும் சில சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தும் அதிவிசேட வர்த்தமானி ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய மின்சார விநியோகம், மருத்துவமனை, முதியோர் இல்லங்கள், மருந்தகங்கள், நோயாளர் பராமரிப்பு சேவைகள் மற்றும் சிகிச்சை ஆகியவை தொடர்பிலான அனைத்து அவசியமான சேவைகள் மற்றும் தொழில்கள் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ந)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 250 | 220 | 250 |
| உருளைக்கிழங்கு | 130 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 650 | 550 | 600 |
| தக்காளி | 160 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 60 |
| கோவா | 150 | 200 | 240 |
| கரட் | 550 | 600 | 600 |
| பூசணி | 150 | 150 | 200 |
| புடோல் | 200 | 180 | 280 |
| வாழைக்காய் | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 120 | 130 | 160 |
| பாகற்காய் | 250 | 300 | 350 |
| வெண்டிக்காய் | 250 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 110 | 120 |
| பயற்றங்காய் | 400 | 360 | 400 |
| லீக்ஸ் | 200 | 200 | 250 |
| பீற்றூட் | 280 | 320 | 300 |
| கறிமிளகாய் | 500 | 460 | 500 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | -- |
| போஞ்சி | 200 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 200 | 180 | 200 |
| கீரை - 1 பிடி | 90 | 60 | 100 |
| தேசிக்காய் | 150 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 65 | 60-80 |
| இராசவள்ளி | 240 | 180 | 220 |
| வெங்காயப்பூ | 70 | 140 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 40 |
| ஈரப்பலா | -- | 60 | -- |

## மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த தமிழ் கட்சிகள் அரசிற்கு அழுத்தம் கொடுக்கவில்லை

### அமைச்சர் ரொஷான் ரணசிங்க

(கொழும்பு)

மாகாணசபை தேர்தல் தொடர்பில் சிறந்த தீர்மானம் வெகுவிரைவில் அறிவிக்கப்படும்.

எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேர்தல்களை கருத்திற் கொண்டு நாடு தழுவிய ரீதியில் இனி செயற்பாட்டு அரசியலில் ஈடுபடுவோம் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.



மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தேர்தல் முறைமை தொடர்பில் அனைத்து அரசியல் கட்சிகளின் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு.

2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வெற்றிப் பெற்றதை தொடர்ந்து அரசாங்கம் திட்டமிட்ட வகையில் மாகாண சபை தேர்தல் முறைமையை மாற்றியமைத்து தேர்தல் முறைமையில் சிக்கல் நிலைமையை தோற்றுவித்து தேர்தலை பழைய தேர்தல் முறையிலும், புதிய தேர்தல் முறையிலும் நடத்த முடியாத சிக்கல் நிலைமையை உருவாக்கியது.

இனப்பிரச்சினைக்கு தீர்வாக மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆகவே மாகாண சபை தேர்தலை அரசாங்கம் விரைவாக நடத்த வேண்டும் என தற்போது அரசாங்கத்திற்கு அழுத்தம் பிரயோகிக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பு உட்பட தமிழ் தலைமைகள் நல்லாட்சி அரசாங்கத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு ஆரோக்கியமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் மாகாணசபை தேர்தலை நடத்த பல்வேறு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ந)

## அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய கொள்கலன்களை விடுவிக்க இணக்கம்

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தில் தேங்கியுள்ள, அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்களை நாளை திங்கட்கிழமை விடுவிக்க முடியும் என அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அரிசி, சீனி, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய ஆயிரத்து 500 கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக அந்த சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற நிதியமைச்சருடனான கலந்துரையாடலின்போதே, குறித்த கொள்கலன்களை விடுவிப்பதற்கு இணக்கம் வெளியிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்க்கதரிசனம் (எதையும் முன்கூட்டியே அறியும் தன்மை) சிலருக்கு அமைந்துவிட, சிலருக்கு அனுபவித்த பின்புதான் தெரியவருகிறது.
– லேனா தமிழ்வாணன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வவுனியா வளாகத்தை பல்கலைக்கழகமாக்கி தாரைவார்த்த காதை

வவுனியாப் பல்கலைக்கழகம் நேற்று முன்தினம் (11) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் சம்பிரதாயபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அங்குரார்ப்பண நிகழ்வு குறித்த நுழைவாயிற் கல்வெட்டில் சிங்களத்தில் பொறிக்கப்பட்ட பதிவு ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டது.

இவ்வாறு சம்பிரதாயபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட வவுனியா பல்கலைக்கழகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்துக்குட்பட்டு வவுனியா வளாகமாக இயங்கி வந்ததென்பது அனைவரும் அறிந்ததே.

வவுனியா வளாகத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அதிகாரத்துக்குள் வைத்திருக்க வேண்டுமென தமிழ் இனத்தின் நலன் மீது கருசனை கொண்ட பலரும் கருத்துரைத்தனர்.

எனினும் எங்கள் புத்திஜீவிகள் சிலர் வவுனியா வளாகத்தைப் பல்கலைக்கழகமாக ஆக்க வேண்டுமென முன்மொழிவுகளைத் தயாரித்து அதற்கு அனுமதியும் வழங்கி வவுனியா பல்கலைக்கழகமாக அதனை ஆக்கி வைத்தனர்.

இப்போது வவுனியா பல்கலைக்கழகத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்துள்ளார்.

அங்குரார்ப்பண நிகழ்வில் வவுனியா பல்கலைக்கழகம் குறித்த கல்வெட்டுக்களில் சிங்களத்துக்கு முன்னுரிமையும் சிறப்பிடமும் வழங்கப்பட்டிருப்பதைக் காண முடிகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகத்துக்குட்பட்ட வவுனியா வளாகம் வவுனியாப் பல்கலைக்கழகமாக மாற்றப்படும்போது,

அங்கு தமிழ் மொழிக்கே முன்னுரிமையும் முதலிடமும் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது நடக்கவில்லை.

தவிர, வவுனியா வளாகத்தை வவுனியா பல்கலைக்கழகமாக மாற்ற வேண்டுமென ஒற்றைக்காலில் நின்றவர்களும் அதுபற்றிக் கேட்கப்போவதுமில்லை.

ஆக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தை இல்லாமல் செய்து, அதனை வவுனியாப் பல்கலைக்கழகமாக உருமாற்றுவதன் மூலம் சிங்களப் பல்கலைக்கழகமாக அதனை ஆக்கிய சிங்களப் புத்திஜீவிகளின் அறிவாற்றலை எண்ணும்போது – எங்கள் கைக்குள் இருந்த வவுனியா வளாகத்தைப் பல்கலைக்கழகமாக்கி அதனை சிங்களத்துக்குத் தாரைவார்த்த எங்கள் தமிழ்ப் புத்திஜீவிகளையும் நினைக்கும்போது கன்னத்தின் ஓரங்கள் நனைகின்றன.

அந்தோ! பாவப்பட்ட தமிழினமே! சுயநலவாதிகளை நம்பி இருப்பதையும் நீ இழந்து போவதை எப்போதுதான் புரிந்து கொள்ளப் போகிறாய்.

ஆம், ஆங்கில மொழியில் பட்டப்படிப்பு என்றெழுந்து நின்றவர்களால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை இழந்தோம். வவுனியா பல்கலைக்கழகம் என்று முன்மொழிந்ததால் வவுனியா வளாகத்தை தாரைவார்த்தோம்.

இனி என் செய்வோம். இம்முறைக்கு மட்டுமே நம்மவர் வவுனியாவில் துணைவேந்தர். அடுத்தமுறை துணைவேந்தர் துட்டகைமுனுவோ, சிறில் மத்தியுவோ யாரறிவார் அச்சோவே.

## மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துங்கள் இல்லாவிட்டால் மின்துண்டிப்பு ஏற்படும்

### பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

(கொழும்பு)

குளிர்சாதனப் பெட்டி, சலவை இயந்திரம், குளிரூட்டி, மின் அழுத்தி உள்ளிட்ட அதிக மின்சாரம் செலவாகும் மின் இயந்திரங்களின் பாவனையை கட்டுப்படுத்திக் கொள்ளுமாறும் மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்திக்கொள்ளாவிட்டால் எதிர்வரும் மூன்று மாத காலத்திற்கு மின் துண்டிப்பை ஏற்படுத்த வேண்டிவரும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுத் தலைவர் ஜனக்க ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

இலங்கை மின்சார சபையானது எதிர்வரும் மூன்று மாத காலத்திற்கு மின் துண்டிப்பை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதிகேட்டுள்ளது.

இதனால், மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்த தவறும் பட்சத்தில் மின் விநியோகத்தை தடை செய்வதற்கான அவசியம் ஏற்படும்.

தற்போது உள்ள நிலையில், மாலை 6 மணிமுதல் இரவு 10 மணிவரையான காலப்பகுதியில் மின்சாரத் தேவை அதிகமாக காணப்படுகிறது.

இந்த காலப்பகுதியில் மின்சார பாவனையாளர்கள் மின்சாரத்தை குறைவாக பயன்படுத்திக்கொள்வது சிறந்தது.

குறிப்பாக குளிர்சாதனப் பெட்டி (ப்ரிட்ஜ்), சலவை இயந்திரம் (வொஷிங் மெஷின்), குளிரூட்டி (ஏ.சி.), மின் அழுத்தி (அயன் பொக்ஸ்) உள்ளிட்ட அதிக மின்சாரம் செலவாகும் மின் இயந்திரங்களின் பாவனையை கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்.

மேலும், தேவைக்கு அதிகமாக மின் விளக்குகளை பயன்படுத்த வேண்டாம் என்றார். (ம)

## கோதுமை மாவுக்கான தட்டுப்பாடு நீடித்தால் உணவுப் பொருட்களின் விலைகள் பண்டிகைக் காலத்தில் அதிகரிக்கும்

(கொழும்பு)

கோதுமை மாவுக்கான தட்டுப்பாடு நீண்ட காலத்திற்கு நீடித்தால், பண்டிகைக் காலத்தில் பல உணவுப் பொருட்களின் விலைகள் வேகமாக அதிகரிக்கும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சிலர் கோதுமை மாவை இறக்குமதி செய்து தட்டுப்பாடு இருப்பதாக பாவனை செய்து அதிக விலைக்கு விற்பனை செய்வதாக அதன் தலைவர் என்.கே.ஜயவர்தன சிங்கள ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்தார்.

கோதுமை மா தட்டுப்பாடு தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், இதுவரையில் அதற்கான பதில் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## 12 வயதிற்கு குறைவானவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவது குறித்து ஆராய்வு

12 வயதிற்கு குறைந்த சிறுவர்களுக்கு, கொரோனா தடுப்பூசியை செலுத்துவதற்கான பரிந்துரையினை வழங்கவுள்ளதாக சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்தியர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இந்தப் பரிந்துரை எதிர்வரும் வாரம் கிடைக்கப்பெறும் என எதிர்பார்ப்பதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

12 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வு நடத்தி வருவதாக சுகாதார அமைச்சும் ஏற்கனவே தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## போதை மாத்திரைகளுடன் மல்லாகத்தில் ஒருவர் கைது

(அராலி)

இராணுவ புலனாய்வுப் பிரிவினரின் விசேட சுற்றிவளைப்பில், பெருமளவான போதை மாத்திரைகளுடன் சந்தேகநபர் ஒருவர் மல்லாகத்தில் நேற்று இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி பகுதியை சேர்ந்த குறித்த சந்தேகநபர் திருமணம் முடித்து மல்லாகம் பகுதியில் வசித்து வந்துள்ளார்.


இந்நிலையில் மல்லாகத்தில் உள்ள வீடு ஒன்றில் வைத்து 265 போதை மாத்திரைகளுடன், இராணுவ புலனாய்வு பிரிவினர் அவரை கைது செய்து தெல்லிப்பழை பொலிஸாரிடம் கையளித்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

(ம-104)

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்

### சிக்கலான நேரத்தில் யாருடைய ஆலோசனை சிறந்தது?



❖ தாயின் கையில் இருந்து இறங்கி தரையில் தவளத் தொடங்கியது முதல் சாகும் வரை ஏதாவது சிக்கலில் மனிதர்கள் மாட்டித் தவிக்கின்றனர். இதை இயற்கை என்று எடுத்துக் கொள்கிறோம். தவிர்க்க முடியாததையும் செய்ய இயலாததையும் தத்துவம் என்று வைத்துக்கொள்வது மனித வழக்கம். அனைத்து மனிதர்களுக்கும் சிக்கலான காலகட்டம் அல்லது பொல்லாத காலம் வந்தே தீரும் (பிர. 9:12). இதனால் தொழில், குடும்பம், உடல்நலன் போன்ற அம்சங்கள் பாதிக்கப்படக்கூடும்.

❖ மனிதன் தனது குறைகளை ஆராய்ந்து மனம் திரும்புவதற்காகவே துன்பங்கள் நேர்கின்றன. அப்படி தாழ்வு எற்படும் போது ஏன் எனக்கு இப்படி நேரிட்டது? என்று சிந்திக்க வேண்டும் (பிர.7:14). மூதாதையரின் வினைகள் நமது குற்றங்களின் தாக்கம் அதில் இல்லாமல் இருக்காது. எனவே அவற்றுக்கான மன்னிப்பை பெற்று விட்டு மறுபடியும் அந்தத் தவறை செய்யாமல் இருப்பதற்கு இயேசுவிடம் உறுதி அளிக்க வேண்டும். இயேசுவோடு இந்த உடன்பாடு செய்து கொண்ட பிறகு உயிரே போனாலும் அதிலிருந்து மாறக்கூடாது.

இந்த உறுதியில் நாம் நிலைத்திருக்கிறோமா? என்பதை அறிந்து கொள்வதற்காக பல சோதனைகள் வரும் (லூக்கா 8:13). இயேசுவுடன் செய்து கொண்ட உடன்பாட்டை கைவிடாமல் காத்துக் கொண்டால் அதன் பின்னரே அவனுக்கு நேரிட்ட துன்பத்தில் இருந்து நிரந்தர விடுதலையை இயேசு கட்டளையிடுவார்( யாக்கோபு 1:12). அது உடலிலும் ஆவியிலும் உணரப்படும்.எனவே துன்பத்தில் இருந்து விடுதலை பெறுவதற்கு உறவினர்கள், நண்பர்கள், வக்கீல்கள் பொலிஸ் என்று யாருடனும் ஆலோசனை பெறத் தேவையில்லை . இவர்களைப் படைத்த இறைவனே மனதில் நல்ல ஆலோசனைகளைத் தந்து வழிநடத்துவார். (1யோவான் 2:27).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச்சட்டத்தை ஒழித்தாலன்றி அரசியல் கைதிகளுக்கு விடிவு இல்லை

## அருட்தந்தை சக்திவேல் வலியுறுத்து

(நெளுக்குளம்)

**பயங்கரவாத திருத்த சட்டத்தை தொடர்ந்து அரசியல் கைதிகள் விடுதலையாவார்கள் எனும் எதிர்பார்ப்பு பொய்த்து விட்டது என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்தார்.**



நேற்று அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

பயங்கரவாத திருத்த சட்டத்தை தொடர்ந்து அரசியல் கைதிகள் விடுதலையாவார்கள் எனும் எதிர்பார்ப்பு பொய்த்து விட்டது. பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கோ அதனால் மீறப்படும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் எந்த ஆட்சியாளர்களும் ஆயத்தமில்லை என்பதையே பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தமென முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

தமிழ் மக்களின் அரசியல் ரீதியான பிரச்சினையை சிங்கள பௌத்த தேசியவாத அரசியல் தலைவர்கள் தீர்வை பெற்றுக் கொடுப்பதற்கு தவறியது மட்டுமல்ல அரசியல் போராட்ட எழுச்சியை அடக்குவதற்கு பயங்கரவாத சட்டம் உருவாக்கப்பட்டதோடு அச்சட்டம் நான்கு தசாப்தங்கள் கடந்தும் இன்றும் பாதுகாக்கப்படுகின்றது.

ஆயுதம் மௌனிக்கப்பட்டு ஒரு தசாப்தம் கடந்த போதும் அரசியல் தீர்வு 13+ என்பதை நீக்கி தமிழர்களுக்கு அரசியல் பிரச்சினை இல்லை என்பதே இன்றைய ஆட்சியாளர்களின் நிலைப்பாடு. இதற்கு மத்தியிலேயே பயங்கரவாத தடைச் சட்டம் திருத்தமென போலி முன்மொழிவுகள் வைக்கப்பட்டுள்ளன.

சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் இக்கொடிய சட்டம் நீக்கப்பட வேண்டும் எனக் கூறினாலும் உள்நாட்டு மனித உரிமை ஆணைக்குழு இச்சட்டம் அகற்றப் படுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை.

பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிரான மக்கள் சக்தியை வடகிழக்கிலும், வட கிழக்கிற்கு வெளியிலும் கட்டியெழுப்புவதற்கான தேவை எழுந்துள்ளது. இத்தகைய சூழ்நிலையில் மக்கள் வாழ்வை காக்க மக்கள் சக்தியை கட்டியெழுப்பி அதன்மூலம் பயங்கரவாத தடைச் சட்டத்தை இல்லாதொழிக்க செயற்பட வேண்டும். அதற்கான முனைப்பு காட்ட வேண்டும். இதுவே காலத்தின் தேவையாகும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4-299)

# தங்கம் வென்ற யுவதிக்கு ஜனாதிபதி பாராட்டு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த கணேஷ் இந்திராதேவி என்ற யுவதி கடந்த மாதம் 18 ஆம் திகதி பாகிஸ்தான் லாகூர் நகரில் இடம்பெற்ற இரண்டாவது ஸ்ரீலங்கா பாகிஸ்தான் சவேட் குத்துச் சண்டை போட்டியில் தங்கப் பதக்கம் வென்று முல்லைத்தீவு மாவட்டத்திற்கு மாத்திரம் இல்லாமல் நாட்டிற்கும் பெருமை சேர்த்தார்.

சாதித்த குறித்த யுவதியை பல்வேறு தரப்பினரும் பாராட்டி கௌரவித்து வருகின்ற நிலையில் நேற்று முன்தினம் குறித்த யுவதியை ஜனாதிபதி கௌரவித்ததோடு அவருக்கு நினைவு பரிசினையும் வழங்கினார். வவுனியா பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் வைத்து யுவதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் கௌரவிக்கப்பட்டார். (5-4-281)

# மன்னாரில் விபத்து வாகனங்கள் சேதம்



(மன்னார்)

மன்னார் பெரிய பாலம் பிரதான சோதனைச் சாவடி அருகில் நேற்று சனிக்கிழமை காலை 6 மணியளவில் குளிர்பானப் பொருட்களை மன்னாரிற்கு ஏற்றி வந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி மீது மாந்தை மேற்கு பிரதேசத்தில் இருந்து மணல் ஏற்றி வந்த டிப்பர் மோதி விபத்து ஏற்பட்டது.

இவ் விபத்தில் இரண்டு வாகனங்களும் சேதமடைந்த போதிலும் வாகனத்தில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

சம்பவ இடத்திற்கு சென்ற மன்னார் போக்குவரத்து பிரிவு பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-4-285)



கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தருமபுரம் இலக்கம் 1 அ.த.க.பாடசாலையில் நேற்று கண்ணாடி வழங்கல், கொரோனா தடுப்பு ஊசி ஏற்றுதல் மற்றும் மின்சாரம் பெற முடியாதுள்ள குடும்பங்களுக்கான சூரிய மின்கலங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளதுடன் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் இராணுவத்தினரால் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வின் 57 ஆவது கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் நந்தன, கண்டாவளை பிரதேச செயலாளர் பிருந்தகன் மற்றும் படை 175 ஆவது படையணி கட்டளைத் தளபதி, 72 ஆவது படையணி கட்டளைத் தளபதி எனப் பலரும் கலந்து கொண்டனர். (படங்கள் : தேவானந்தன்)

# இலங்கைக்கு போதைப்பொருள் கடத்த முயன்ற 8 பேர் கைது

(இராமேஸ்வரம்)

தமிழகத்திலிருந்து இலங்கைக்கு கொக்கேய்ன் போதைப் பொருள் கடத்திய குற்றச்சாட்டில் பொலிஸ் உட்பட 8 பேரை இராமநாதபுரம் பொலிஸார் கைது செய்தனர்.

இராமேஸ்வரம்தனுஷ்கோடி கடல் வழியாக இலங்கைக்கு கொக்கேய்ன் போதைப் பொருள் கடத்த இருப்பதாக இராமநாதபுரம் குற்றத்தடுப்புப்பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து கடந்த வியாழக்கிழமை காலை இராமேஸ்வரம் பகுதியில் தொடர்ந்து சோதனை செய்து வந்தனர்.

அப்போது இராமேஸ்வரம் பேருந்து நிலையம் அருகே தனியார் நட்சத்திர விடுதிக்கு பின்புறம் ஒரு கும்பல் சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்ததை கண்ட குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணை மேற்கொள்ள சென்ற போது அவர்கள் தப்பி ஓட முயற்சித்தனர்.

அவர்களை மடக்கி பிடித்து சோதனை செய்ததில் அவர்களிடம் இருந்து ஆயிரத்து 500 கிராம் கொக்கேய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

குறித்த கொக்கேய்ன் இந்திய மதிப்பில் சுமார் 8 கோடி ரூபாய் என அதிகாரிகள் தெரிவித்தனர். (4-5-100)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

மகா சிவராத்திரியை முன்னிட்டு அளவெட்டி பாரதி இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை-09 மணி முதல் பிற்பகல்-02 மணி வரை அளவெட்டி கும்பளை பாரதி பூங்கா மண்டபத்தில் இடம்பெறும்.

மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு இரத்ததான முகாம் ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-4-18)

# மஹோற்சவம்

(குப்பிழான்)

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்தும் 16 தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும்-01 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை-08 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை காலை-08 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (5-4-18)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## அராலியில்...

பெற்று வருகின்றார்.

மோட்டார் சைக்கிளைக் கட்டுப்படுத்த முடியாத அதிவேகம் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

இதில் உடையார்கட்டு - விசுவமடு பகுதியைச் சொந்த இடமாகக் கொண்டு, வட்டு மேற்கு - வட்டுக்கோட்டை பகுதியில் வசித்துவந்த கந்தசாமி நிரோஜன் (வயது - 22) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வட்டு.மேற்கு - வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த அல்பினோ வசந்த் (வயது - 20) என்ற இளைஞரே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-18,33,104)

## வட மாகாணத்...

தினால் 19ஆம், 20ஆம், 21ஆம் திகதிகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

வானிலை அவதான நிலையம் இது தொடர்பில் விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

எதிர்வரும் 19, 20, 21 ஆம் திகதிகளிலும் கூடுதலாக வடக்கு மற்றும் ஏனைய பிரதேசங்களிலும் கனமழை பெய்யக் கூடிய சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன.

வடகிழக்கு பருவகாற்றின் தாக்கத்தால் இந்த மழைவீழ்ச்சி கிடைக்கின்றது.

எனவே விவசாயிகள் மற்றும் ஏனையவர்கள் இது தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## 23 பேர்...

னர்.

அதன்படி, நாட்டில் இதுவரை 15,777 பேர் கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளனர். (ம)

## பசில் ராஜபக்ஷ...

வில்லை என நாரஹென்பிட்டி அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

இணையத்தள வலையொளி தளம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின்போது அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்தும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவர முன்நின்று செயற்பட்ட விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோருக்கு எதிராக அரசாங்கத்திற்குள் நடக்கும் செயற்பாடுகள் நன்றி கெட்ட செயல்.

இவர்களை அரசாங்கத்தில் இருந்து நீக்கினால் அரசாங்கத்தின் பயணமும் முடிவுக்கு வந்து விடும் என்றார். (ம)

## பொருளாதார...

ஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, நீதியான சமூகத்துக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய ஆகியோர் கூட்டறிக்கையில் கையொப்பமிட்டுள்ளனர்.

மேலும், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், கபீர் ஹாஷிம், ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன, இரா.சாணக்கியன் ஆகியோரும் அதில் கைச்சாத்திட்டுள்ளனர்.

கூட்டறிக்கையின்பிரகாரம், தற்போதைய பொருளாதார நெருக்கடியில் நாடு எதிர்கொள்ளும் நான்கு முக்கிய சவால்களை அவர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.

01. 2020 ஏப்ரலில் இருந்து சர்வதேச இறையாண்மைப் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் சர்வதேச நிதிச் சந்தைகளில் இருந்து இலங்கை கடன் பெறுவதற்கான வாய்ப்புகளை இழந்தமையே இதன் மையக்கருவாகும்.

02. இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு மாதாந்தம் தேவையான இறக்குமதிக்குக்கூட போதுமானதாக இல்லாத காரணத்தால், சுதந்திரத்துக்குப் பின்னர் மிகக் குறைந்த அந்நியச் செலாவணியை நாடு கொண்டுள்ளது.

03. 2020ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட அரச வருவாயில் 70 சதவீத கடன் வட்டி செலவினம் இதுவரை பதிவு செய்யப்பட்ட மிக உயர்ந்த கடன் வட்டி விகிதமாகும்.

04. கடந்த இரண்டு ஆண்டுகளில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மொத்த பொதுக் கடன் 95 சதவீதம் முதல் 120 சதவீதம் வரை உயர்ந்துள்ளது.

மேற்கூறியவை மிகப்பெரிய பொருளாதார சவாலைப் பிரதிபலிக்கின்றது என்று கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

## அரசியல் கைதி...

களின் விடுதலை,சிறைச்சாலைக்குள் நிலவும் கைதிகளின் நெரிசலை குறைத்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுபீட்சமான எதிர்கால கொள்கைத்திட்டத்தில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். கைதிகளை சுதந்திரமாக அவதானித்து அரச தலைவர் மன்னிப்பு வழங்குவார்.

கடந்த அரசாங்கத்தில் நான் சிறையிலடைக்கப்பட்டபோது வழக்கு விசாரணைகள் இல்லாமல் பலகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் என்னுடன் உரையாடினார்கள்.

சிறைக்கைதிகளின் விடுதலை ஜெனிவாவிற்கு ஒரு பிரச்சினையாக அமையாது.

ஜெனிவாவின் விருப்பத்திற்கமைய அரசியல் தீர்மானங்களை எம்மால் எடுக்க முடியாது.

நாட்டு மக்களின் நலனையும் பொதுச் சட்டத்தையும் அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் செயற்படும் என்றார். (ம)

## + 1,162...

கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரை கோவிட் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 626, 966 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## பயங்...

கையெழுத்துத் திரட்டப்படவுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின் ஏற்பாட்டில் இடம்பெறும் இதற்கான நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் பங்கேற்கவுள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 49ஆவது கூட்டத்தொடர் பெப்ரவரி இறுதியில் ஆரம்பமாகின்றது.

இந்நிலையில், 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கர வாதத் தடுப்புச் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கான சட்ட மூலத்தை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் கடந்த 10ஆம் திகதிபாராளுமன்றத்தில் முன்வைத்தார்.

எனினும், நடைமுறையில் உள்ள தடுத்துக்கும் புதிதாக முன்வைக்கப்பட்ட சட்ட திருத்தத்துக்கும் இடையில் பாரிய வித்தியாசம் எதுவும் இல்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி சட்டமூலம் முழுமையாக மாற்றியமைக்கப்பட வேண்டும் அல்லது தற்போது அமுலில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியே இந்தக் கையெழுத்து வேட்டை இடம்பெறுகின்றது. (ம)

## சர்வாதிகார...

கார ஆட்சி காலத்துக்கு செல்லும் முயற்சியாகும் என சுகாதார சேவையாளர் சம்மேளனத்தின் இணைப்பாளர் ரவி குமுதேஷ் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர், இது தொடர்பில் சர்வதேச தொழிலாளர் சம்மேளனத்துடன் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ம)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532





































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர் தேவை

கொக்குவில் பகுதியில் அமைந்துள்ள ஆலயத்திற்கு ஆலய வேலை செய்யக்கூடிய 40 வயதிற்கு மேற்பட்ட ஒழுக்கசீலரான பணியாளர் உடனடியாகத் தேவை.

நிர்வாக சபை
அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம்
தலையாழி, கொக்குவில்

தொடர்புகளுக்கு
**076 622 1193**
**077 535 9103**
(10156)

## வேலையாட்கள் தேவை

உடுவிலில் அமைந்துள்ள இந்து ஆலயத்திற்கு ஆலயத்தின் சமையலறையையும் மற்றும் ஆலயத்தின் சுற்றுப்புறச் சூழலையும் துப்புரவாகப் பேணிப் பாதுகாக்க வேலையாட்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

தொடர்புகளுக்கு (10099)
**075 447 2884**

## மணமகள் தேவை

1977, இந்து கௌரவ குடும்பம். திருவோண நட்சத்திரம், 56 ½ கிரக பாவம் உடைய அரச உத்தியோக மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. (10147)

**077 728 6050**

## LIVE IN CANADA

### இலவச கருத்தரங்கு

கனடாவில் வேலைவாய்ப்புகள், நிரந்தர வதிவிடம், உயர்கல்வி வழிமுறைகளும் ஆலோசனைகளும்

13-02-2022 ஞாயிறு காலை - 11 மணி

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.

முற்பதிவு அவசியம் **0777-068-777** (C-3747)

## உடனடி வேலைவாய்ப்பு

Termite.com (pvt) Ltd

### வாகன ஓட்டுனர் தேவை

- கனரக / சிறிய ரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்.
- 35 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- ஆரம்ப சம்பளம் + EPF / ETF + OT

### அலுவலக முகாமையாளர் (Admin Manager)

- 02 வருட அனுபவம் தேவை.
- கணினி அறிவு மற்றும் ஆங்கில அறிவு கட்டாயம் தேவை.
- ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.
- வயதெல்லை 35ற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- ஆரம்ப சம்பளம் + EPF / ETF + OT
- பேச்சுத்திறன் உள்ளவராக இருத்தல் விரும்பத்தக்கது.

தங்களது சுயவிபரக் கோவையினை (CV) termite.com@gmail.com எனும் மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைக்கு மாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு:- அலுவலக நேரத்தில் (9.00 am - 5.00 pm) மட்டும் தொடர்பு கொள்ளவும். (10137)

**T.P - 021 493 0011 / 021 492 7626**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் - புன்னாலைக் கட்டுவன் வீதியில் 5 1/2 பரப்புக்காணி 2 பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
(சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 700 மீற்றர் தூரத்தில்) (10141)

**077 911 6983**
**077 288 0152**

## விரைவு பொதிகள் சேவை

### V2 TRAVELS

**UK-975/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

**0768226240** DHL (C-3746)

## காணி விற்பனைக்கு

யாழ்.சாவகச்சேரி நகரத்தில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்

- சிவன் கோயில் அருகாமையில்.
- A9 வீதியில் இருந்து 200 மீற்றர் தூரத்தில்.
- பஸ் நிலையத்தில் இருந்து 300 மீற்றர் தூரம்.
- றெயில்வே ஸ்ரேசனிலிருந்து 150 மீற்றர் தூரம்.

(10140)

**077 658 5999**
**076 658 3621**

## கடை வாடகைக்கு தேவை

மருதனார்மடம், சுன்னாகம், அச்சுவேலி, நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி ஆகிய இடங்களில் 1500 சதுரஅடிக்கு மேல் கடை வாடகைக்கு தேவை. (10103)

**076 287 8655**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 54 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 14 அடி பாதையுடன்
- தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும்
- நிலப்பரப்பு
- A32 பிரதான வீதியில் இருந்து 500 m தூரம்
- பயன்தரும் 250 தென்னைகள் உள்ளன
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன (பைப் லைனிங்)

**பார்வையிடும் நேரம்**
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

**ஒரு பரப்பின் விலை 3,50,000/=**

தரகர் தேவையில்லை

**தொடர்பு**
**077 814 7389**
**077 117 8578**
(10135)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 42 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- நிலப்பரப்பு
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- 14 அடி பாதையுடன்
- A32 பிரதான வீதியில் இருந்து 400 m தூரம்

**பார்வையிடும் நேரம்**
காலை 6 மணி தொடக்கம்
மாலை 6 மணிவரை

**ஒரு பரப்பின் விலை 3,00,000/=**

தரகர் தேவையில்லை

**தொடர்பு**
**077 814 7389**
**077 117 8578**
(10135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka

விலை : 30.00

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 331

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2053 13.02.2022 தொலைபேசி : 021 222 3378



## பாதிக்கப்பட்டவர்களை தடுக்கும் பொலிஸார்





## சிங்களமயமாகும் வவு. பல்கலைக்கழகம்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர். தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

உளவளத்துணையாளராகப் பணியாற்றிய இணுவிலைச் சேர்ந்த கா.வைத்தீஸ்வரன் அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைகின்றோம்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகச் செயலாளராகவும் பணியாற்றிய கா. வைத்தீஸ்வரன் அவர்கள் 25 இற்கும் மேற்பட்ட சுகாதார வழிகாட்டல் நூல்களை எழுதியவர். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

அச்சமயம் சாத்திரியார் சதாசிவம் ஆழ்ந்த யோசனையில் இருப்பதை அவதானித்த மூப்பர்; என்ன சாத்திரியார், கடுமையாக யோசிக்கிறியள் என்ன சங்கதி என்று வினவினார்.

**சாத்திரியார்:** இலங்கையில இருக்கிற சனங்கள் யோசிக்காமல் இருக்க முடியுமோ? நான் கனடாவில இருந்து போட்டு இஞ்ச வந்தன். என்ர பிள்ளையள் இலங்கைக்குப் போக வேண்டாம் அப்பா எண்டு எத்தனையோ தடவைகள் சொன்னவியள். நான் அதைக் கேட்காமல் இறுதிக் காலத்தில என்ர ஊரில சாகவேணும் எண்டு வந்தன்.

இப்ப இஞ்ச மருந்துக்கும் தட்டுப்பாடு வந்திட்டுது. ஒரு நாளைக்கு 12 குளிசை போட்டால் தான் என்னால நடமாட முடியும். அதை நினைச்சாத்தான் யோசனையா இருக்குது.

**கங்காணி:** சாத்திரியார் மருந்துக்குத் தட்டுப்பாடு எண்டு யோசிச்சு மூளையைக் கைவிட்டிடாதீங்க. யூரியா உரம் கள்ளச் சந்தையில 30 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனையாகிற மாதிரி, இந்த மருந்துப் பொருட்களும் கள்ளச் சந்தைக்கு வரும்.

இரண்டு பனடோல் இருநூறு ரூபாய் எண்டு விற்பனையாகும். கனடாக் காசு இருக்கிற நீங்கள் யோசிக்கத் தேவையில்லை.

எங்களைப் போல ஏழைகள் தான் மருந்துத் தட்டுப்பாடு பற்றிக் கவலைப்பட வேணும்.

**விதானையார்:** நாடு கெட்டுப் போய்ச்சுது. அதர்மம் தலைவிரித்தாடுது. இந்தாப் பாருங்க நெல் அறுவடை செய்ய இருந்த நேரத்தில, மழை கொட்டுது. நெல் வெட்டும் மிசினுக்கும் தட்டுப்பாடு எண்டால், சனங்கள் என்ன தான் செய்யிறது.

**சிறாப்பர்:** அதெண்டால் உண்மை தான். உரம் இல்லாமல் ஏதோ ஒரு மாதிரியாக நெல்லை விளைவிக்க, அந்த நேரம் பார்த்து மழை கொட்டுது எண்டால் எல்லாம் எங்கட கெடு காலம் தானே!

**பண்டிதர்:** அந்தக் காலத்தில உப்பட்டி மழை எண்டு பெய்யிற வழக்கம் இருந்தது தான். ஆனால் மெல்லிய தூறலோட அந்த மழை நிண்டு போகும்.

இதென்னடா எண்டால், வயலில வெள்ளம் கிடக்கிற அளவில யல்லோ மழை பெய்யுது.

**வாத்தியார்:** மாசி மழை மண்ணுக்கு உதவாது எண்ட பழமொழியைச் சற்று மாத்தி, தை மாதக் கடைசி மழையும் மண்ணுக்கு உதவாது எண்டல்லோ சொல்ல வேணும் போல...

**கங்காணி:** இயற்கையின்ர அழிவுகளைக் கடந்துதான் விவசாயம் உயிர்ப்புப் பெற வேணும்.

அதேநேரம் எவ்வளவு தான் கஷ்ட துன்பம் இருந்தாலும் தர்மம் செய்யிற கனவான்கள் இருக்கத் தான் செய்யினம்.

**மூப்பர்:** என்ன கங்காணியார் சொல்லுறியள் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்களன்.

**விதானையார்:** கண்டாவளைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட தருமபுரத்தில இராஜரட்ணம் இராசேந்திரம் என்கின்ற ஒரு விவசாயி 20 ஏக்கரில நெல் செய்கை செய்கிறார்.

அவர் தன்ர வயலில விளைஞ்ச நெல்லில பெரும் பகுதியை அங்க இருக்கிற, நெல் விதைக்காத மக்களுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார் எண்டால், எப்படியான உயர்ந்த சிந்தனை அவரிட்ட இருக்குது எண்டதைப் பாருங்களன்.

**பண்டிதர்:** விதானையார் சொல்லுற விசயம் நானும் அறிஞ்சனான். இந்த முறை 35 குடும்பங்களுக்கு அந்த அன்பர் நெல்லுக் கொடுத்திருக்கிறார்.

அவருக்கு ஆலடியில நன்றியும் பாராட்டும் தெரிவிக்க வேணும் இவ்வாறு பண்டிதர் கூற, அனைவரும் எழுந்து நின்று, இராஜரட்ணம் இராசேந்திரம் என்ற கனவானுக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அவர் போல இன்னும் பலர் இப்படியான நல்ல காரியங்களைச் செய்வார்கள். அது பற்றி வெளியில தெரியாமல் இருக்கலாம்.

இப்பேர்ப்பட்ட நல்ல உள்ளங்களுக்கும் ஆலடி மாநாட்டில நன்றியையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம் எனக் கூறி அமர்ந்தனர். இதையடுத்து மாநாட்டுத் தலைவர் வாத்தியார் வைத்திலிங்கம் எழுந்தார்.

2022 ஆம் ஆண்டில இருந்து ஆலடி மாநாட்டில ஒவ்வொரு பிரச்சினைகளை முன் வைத்து அதை நிவர்த்தி செய்யக் கோரும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேணும் எண்டு நான் விரும்புகிறன். அதை நீங்கள் எதிர்க்க மாட்டீர்கள் என்பது எனக்கு நன்கு தெரியும்.

அந்த அடிப்படையில, வடபுலத்தில பல இடங்களிலும் வீதியோரங்களில் பஸ் தரிப்பிடங்கள் கட்டப்படிருக்கின்றன. ஞாபகார்த்தமாகவும் சமூக நலன் கருதியும் நல்ல முறையில அமைக்கப்பட்ட அந்த பஸ் தரிப்பு நிலையங்கள் துப்பரவு இல்லாமல் இருக்கிறது தான் பெரிய குறையாகவுள்ளது.

எனவே குறித்த பஸ்தரிப்பு இடங்களை துப்பரவு செய்து தூய்மையாக வைத்திருக்கின்ற ஏற்பாட்டை, அந்தந்த உள்ளூராட்சி சபைகள் அல்லது அந்த பஸ்தரிப்பு இடத்தை அமைத்துக் கொடுத்த அன்பர்கள் செய்வார்களாக இருந்தால் அது மிகப் பயனுறுதி மிக்கதாக இருக்கும்.

எனவே பஸ்தரிப்பு இடங்களைத் தொடர்ச்சியாகத் துப்பரவு செய்து அவற்றை நல்ல முறையில பேண வேண்டும் என்ற தீர்மானத்தை இண்டைக்கு எடுப்பம் எண்டு வாத்தியார் கூற,

மாநாட்டு உறுப்பினர்கள் அதனை ஏகமனதாக ஆதரிக்க, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டா மணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.



## நெல்லுக் கொடுத்த தருமபுரத்து கனவானைப் பாராட்டுவோம்

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத்தை சீண்டும் சிங்கள மயமாக்கல்

**போ**ரின் கோரப் பிடியில் இருந்து இந்த நாடு மீண்டுவிட்டது என ஆட்சியாளர்கள் மார்தட்டிக் கொண்டாலும் சிறுபான்மைத் தமிழினம் இந்த நாட்டில் சகல அதிகாரங்களுடனும் நிம்மதியாய் வாழ்கிறனர் என்று யாரும் கூறுவார்களாக இருந்தால் அது முழுப் பூசணிக்காயை சோற்றில் புதைத்ததற்குச் சமமானது.

தமிழினத்தின் உரிமைகள் என்பது இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் முதல் மறுக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றது என்பது தான் இங்கு உண்மையானது.

பெரும்பான்மை ஆட்சியாளர்களுக்கு தூபம் போடும் சிலர் இதை மறுத்தாலும் இதுதான் உண்மையிலும் உண்மை.

> **“போர் முற்றுப் பெற்றுவிட்டது. இனி சிறுபான்மைத் தமிழினம் சகல உரிமைகளையும் பெற்று நிம்மதியாய் வாழும் என சர்வதேசம் நம்பியது. ஆனால் நடந்ததோ அதற்கு எதிர்மாறாய் அமைந்தது.”**



இது பெரும்பான்மை சிங்களவர்களைக் கொண்ட நாடு. இங்கு ஆட்சி மொழி சிங்களம். ஆட்சிக்குரியவர்கள் சிங்களவர்கள். சகல அதிகாரங்களையும் கொண்டவர்கள் நாங்களே.

இங்கு சிறுபான்மை இனத்தவர் வாழலாம். ஆனால் இந்த நாட்டில் அவர்கள் உரிமை கொண்டாட முடியாது. இது பௌத்த சிங்கள நாடு என்ற எண்ணப்பாடே இந்த நாட்டில் இனங்களுக்கிடையில் முரண்பாடு எழ முழுக் காரணமாய் அமைந்தன.

அதன் விளைவு சிறுபான்மைத் தமிழினம் போராடத் தலைப்பட்டது. அதன்பின் தமிழினத்தின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட பெரும்பான்மை ஆட்சியாளர்கள் தமிழினத்தின் மீது தீராத கோபம் கொண்டவராய் மாறினர்.

எப்பேர்ப்பட்டாவது தமிழினத்தின் போராட்டத்தை சிதைவுற வைக்க பிரயத்தனம் செய்தனர்.

உலக நாடுகளின் மகா ஒத்துழைப்புடன் தமிழினத்தின் போராட்டம் முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட்டது.

பயங்கரவாதம் முற்றுப் பெற்று விட்டது. இனி இலங்கையில் உள்ள அனைத்து இன மக்களும் ஒற்றுமையாய் சகல உரிமைகளையும் பெற்று வாழ்வார்கள் என சர்வதேசம் நம்பியது.

ஆனால் நடந்ததோ அதற்கு எதிர்மறையானது என்பதை சர்வதேசம் இன்றுவரை உணர்ந்து கொள்ளவில்லை என்பது கண்கூடு.

போர் முற்றுப் பெற்றதன் பின்னர் தமிழினத்தின் பூர்வீக நிலங்கள் ஏதோ ஒரு வகையில் பறிக்கப்பட்டுக் கொண்டே இருந்தன, இருக்கின்றன.

அத்துடன் தமிழர் பிரதேசங்களில் சிங்கள மயமாக்கல் மிகத் தாராளமாக நடந்தேறிய வண்ணமே உள்ளன.

தமிழினத்திற்கான தீர்வு விடயம் பற்றி ஆட்சியாளர்கள் இம்மியும் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

அதிலும் தமிழ்த் தரப்பு சர்வதேசத்தை நாடுவது சிங்கள மக்களை கோபமூட்டும் செயல் என்ற வர்ணிப்புக்களும் எழுந்த வண்ணமே உள்ளன.

தமிழினத்தின் பூர்வீக நிலங்களை கையகப்படுத்தும் முயற்சிக்கு எவ்வளவு எதிர்ப்புக்கள் எழுந்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாது தமது செயற்பாடுகளை மிகத் தீவிரப்படுத்துவதில் ஆட்சியாளர்கள் கொஞ்சமும் பின்னிற்பதாகத் தெரியவில்லை.

இதற்கு தகுந்த உதாரணமாக, கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவிரவாக முல்லைத்தீவு குருந்தூர் மலைப் பகுதியில் தமிழர் பூர்வீக வழிபாட்டுத் தலமாகிய குருந்தூர் மலையில் பௌத்த பிக்குகள் பலர் இணைந்து பிரித் தோதல் மேற்கொண்டமையினைக் குறிப்பிட முடியும்.

தொல்லியல் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்ட குறித்த பிரதேசம் பௌத்த விகாரைக்குரிய அடையாளங்கள் காணப்படுவதாகவும் அது பௌத்தத்திற்குரிய இடமென்றும் கூறி இவ்வாறு பௌத்த மயமாக்கலை மேற்கொள்வதென்பது எந்த வகையிலும் தர்மம் ஆகிவிடாது.

தமிழினத்தின் பூர்வீக நிலங்களைக் கையகப்படுத்துவதனூடே இலங்கை ஒட்டுமொத்தமாய் பௌத்த நாடு என்பதை நிரூபிக்கும் செயலில் ஈடுபடுவதை உணர முடிகின்றது.

இதன் வெளிப்பாடே சிங்களவர் வாழாத தமிழர் பிரதேசங்களில் பௌத்த விகாரைகள் மிகப் பிரமாண்டமாக அமைக்கப்படுவது என்பது காட்டி நிற்கின்றது.

வடக்கில் ஒரே ஒரு பல்கலைக்கழகம் மாத்திரமே இருக்கின்றது எனும் குறை தீர யாழ். பல்கலையின் வவுனியா வளாகம் வவுனியாப் பல்கலைக் கழகமாக மாற்றப்பட்டதும் தமிழினம் மிகவும் மகிழ்வடைந்தது.

வடக்கில் இரண்டு பல்கலைக்கழகங்கள் அமைந்தால் அது தமிழ் மாணவர்களின் கல்வி நிலை உயர்வுக்கு மிகவும் நன்மையாக அமையும் என அனைவரும் ஒட்டுமொத்தமாய் வவுனியா பல்கலைக் கழக உருவாக்கத்தை வரவேற்றனர்.

வவுனியா பல்கலைக் கழகத்தை திறந்து வைக்க கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வவுனியாவுக்கு விஜயம் செய்திருந்தார்.

வவுனியா பல்கலைக் கழகத்திற்குள் உள்நுழையும் போது பீடங்களை சுட்டி நிற்கும் கல்வெட்டுக்கள் இடம் பெற்றிருந்தன.

இதில் பார்வைக்குப் புலப்படும் வகையில் தமிழ் மொழியுடனான கல்வெட்டு காணப்பட்ட நிலையில் கடந்த வியாழக்கிழமை இரவோடு இரவாக தமிழ் மொழியிலான கல்வெட்டை அகற்றி விட்டு அவ்விடத்தில் சிங்கள மொழியிலான கல்வெட்டை நிறுவியுள்ளனர் எனின் இதன் சிந்தனை எது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

தமிழ் மாணவர்கள் பயன் பெறக்கூடிய வகையில் வவுனியா பல்கலைக்கழகம் அமையும் என நாம் நினைத்திருந்தாலும் தமிழ்க் கல்வெட்டை அகற்றியதனூடாக வவுனியாவில் எதற்காக பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் ஊகிக்க முடியும்.

ஆக, இலங்கைத் திருநாட்டில் சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து தமிழினத்தின் மீதான திணிப்புக்கள் தீர்ந்த பாடில்லை என்பதுடன் சிங்கள மயமாக்கல் தீவிரமாய் நடந்தேறுகின்றது என்ற முடிவு தெட்டத் தெளிவாகிறது.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## யானையைப் பிடித்தல்



ஒரு ராஜா காட்டில் உலவும் யாராலும் பிடிக்க முடியாத யானை ஒன்றைப் பிடிக்க விரும்பினான். கடினமாக முயற்சித்தும் பிடிக்க முடியவில்லை. அவனது படையிலிருந்த வீரர்களை எல்லாம் அனுப்பி அந்த யானையைப் பிடித்து வர உத்தரவிட்டான். எதுவும் பலிக்கவில்லை. கடைசியில் யார் அந்த யானையைப் பிடித்து வருகிறாரோ அவருக்கு தனது இராச்சியத்தில் பாதியை தந்து விடுவதாக அறிவித்து விட்டான்.

இந்த செய்தி ஆமைக்கும் தெரிந்தது. உடனே ராஜாவைப் போய் சந்தித்த ஆமை "நான் உங்கள் சவாலை ஏற்றுக் கொள்கின்றேன்" என்று தெரிவித்தது. ஆச்சரியமடைந்த ராஜா, "என் படை வீரர்கள் எல்லாரும் முயன்று தோற்ற செயலை நீ செய்யப் போகிறாயா?" என்று ஏளனமாகக் கேட்டான். அதற்கு ஆமை உறுதியுடன், "இன்னும் இரண்டு நாட்களுக்குள் அந்த யானையை நான் பிடித்து வருகிறேன்" என்று சொல்லிவிட்டு விடை பெற்றுக் கொண்டது.

யானையைப் பிடிக்கப் போகும் முன் ஓர் ஏற்பாடு செய்தது ஆமை. ஓர் இடத்தில் பெரிதாக பள்ளம் தோண்டியது. யானை விழுந்தால் வசமாக மாட்டிக் கொள்ளும் வகையில் பெரிதாக இருந்த அந்த பள்ளத்தின் மேலே குறுக்கும் நெடுக்குமாக கம்புகளையும் குச்சிகளையும் போட்டது. பின் அவற்றின் மீது இலைகளையும் போட்டு பள்ளம் இருப்பதே தெரியாத அளவுக்கு மூடி வைத்து விட்டது. பின் காட்டுக்குள் சென்ற ஆமை யானையை நேருக்கு நேர் பார்த்தது. "உனக்கு தெரியுமா? நீதான் காட்டிலேயே பெரிய விலங்கு. நீதான் எல்லோருக்கும் ராஜாவாக இருக்க வேண்டியவன்" என்றது யானை. அதுவரை இப்படி யோசிக்கவே இல்லை.

ஆமை சொல்வது சரிதான் என்று நினைத்தது யானை. "அங்கே கிராம மக்கள் எல்லோரும் பெரிய விலங்கு எதுவோ அதுவே இனி மேல் ராஜாவாக இருக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நீ கிராமத்து வந்தால் உடனே உன்னை ராஜாவாக முடிசூட்ட காத்திருக்கிறார்கள் தெரியுமா?" என்றது ஆமை. யானைக்கு ஆமை சொல்வதைக் கேட்க ஆனந்தம் பெருகியது. யானை ஆமையுடன் வர ஒப்புக் கொண்டு விட்டது. "ராஜாவாகப் போகிற யானை இல்லையா நீ அதனால் உன்னை அலங்காரித்து கூட்டிச் செல்கிறேன்" என்று ஆமை யானையை மணிகளைக் கொண்டு அழகாக அலங்காரம் செய்து அழைத்துச் சென்றது.

இருவரும் கிராமத்திற்குச் செல்லும் வழியாகவே நடந்து சென்றன. கிராமத்தின் அருகே நெருங்கும் போது ஆமை தான் பள்ளம் தோண்டி வைத்து மூடி மறைத்திருந்த இடத்தில் மெதுவாக நடந்து சென்று விட்டது. பின்னால் வந்த யானை ஆமை தோண்டிய பள்ளத்தில் விழுந்து மாட்டிக் கொண்டு விட்டது.

இவ்வாறு தனியாகச் சென்று யானையைப் பிடித்து வந்து விட்டதால் ஆமைக்கு தனது இராச்சியத்தில் பாதியை வெகுமதியாகக் கொடுத்து விட்டான் ராஜா.

# கம்பராமாயணம்

## பால காண்டம்




சிங்கமும் புலியும் கூட அவளைக் கண்டால் அஞ்சி நடுங்கி விடும். உயிர்களைக் கண்டால் அவள் செயிர் கொண்டு அழிப்பாள், அவற்றின் குருதியைக் குடிப்பாள், எலும்புகளை முறிப்பாள், ஆலகால விஷம் போல சுற்றுப்புறத்தைச் சுட்டு எரிப்பாள். அவள் இங்கு உலாவித் திரிகிறாள் என்று அவளைப் பற்றிய செய்திகள் அறிவித்துக்கொண்டிருந்தார்.

தாடகை வருகை

அதற்கு எதிர்பாராத விதமாகக் கோர வடிவம் உடைய அவ்வரக்கி அவர்கள் முன் வந்து நின்றாள். மனித வாடை அவளை அங்கு கொண்ட வந்து சேர்த்தது.

இடியின் ஒலியை இதுவரை வானின் மடியில் தான் கேட்டிருந்தார்கள். இப்போது முதன்முறையாகப் பெண்ணின் குரலில் இடி பேசுவதைக் கேட்டார்கள். மின்னல் என்பதை மழை மேகத்தில் தான் கண்டிருக்கிறார்கள்; அதைப் பின்னிய சடையுடைய அவ்வரக்கியின் கோரச் சிரிப்பில் காண முடிந்தது, அவள் மலை ஒன்று அசைந்து வருவதைப் போல் அவர்கள் முன் நடந்து வருவதை கண்டனர்; பருவதம் அசையும் என்பதை அவள் வருகையில் கண்டனர்; வானில் கண்ட மதிப்பிறையை அவர்கள், அவள் கூனல் பற்களின் முனையில் கண்டனர். வேள்வித் தீயில் காணும் தீப்பொறிகளை அவள் வேள்விக் குறிகளில் காண முடிந்தது. கண்கள் சிவந்து கிடந்தன. பசி என்பதற்கு எரிமலையின் வடிவம் உண்டு என்பதை நெறி தவறிய அவள் இரைச்சலில் கண்டனர்.

தாக்கும் போக்கில் அவர்களை நோக்கி நடந்தாள். "உங்கள் சடை முடி என்னை ஏமாற்றாது. நீங்கள் மணி முடி தரிக்கும் மன்னவனின் சிறுவர்கள் என்பது எனக்குத் தெரியும். வற்றி உலர்ந்த தவசிகளைப் பற்றி தின்று என் பற்கள் கூர் மழுங்கி விட்டன. செங்காயாக சிவந்து கிடக்கும் கனிகள் நீங்கள்; சுவை மிக்கவர்கள், நவையற்றவர்கள். நெய்யும் சோறும் நித்தம் தின்று கொழு கொழுத்து உள்ள மழலைகள் நீங்கள். காத்திருந்த எனக்கு வாய்த்த நல்ல உணவாக அமைகின்றீர்கள்" என்று சொல்லிக்கொண்டு சூலப் படையெடுத்து அந்த மூலப்பொருளை நோக்கி எறிந்தாள். வில்லேந்திய வீரன் இராமன் தன் விரலைக் காட்ட அம்பு ஒன்று ஏவினான். அது அவள் ஏவிய சூலத்தை இரு கூறாக்கியது. சூலம் தாங்கிய அவள் அதையிழந்து ஓலமிட்டாள். மறுபடியும் அவள் போர்க்கோலம் கொண்டாள். பெண்ணெண்பதனால் அவளைக் கொல்லத் தயங்கினான். அவள் பேயாக மாறி விட்டதால் அவளை அடக்க வேண்டியது அவன் கடமையாகியது. மெல்லியல் என்ற சொல்லுக்கு அவளிடம் எந்த நல்லியலும் காணப்படவில்லை.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனிமை மிக கொடுமையான வலியைத் தர வல்லது என்பதை உணர்ந்துள்ளீர்களா வியாசரே?



இலங்கையில் கொரோனாத் தாக்கத்தை விடவும் பொருளாதார தாக்கத்தால் மக்கள் நிலை படுமோசமாக போகப் போகிறது போல உள்ளதே வியாசரே?

**தாரு — வடமராட்சி**

**காதல் என்பதை நீங்கள் எப்படி உணர்கிறீர்கள் வியாசரே? பெப்ரவரி 14 காதலர் தினமல்லவா அதனால் அதைப் பற்றிக் கூற முடியுமா?**

காதல் புனிதமானது. காதல் எனும் பெயரில் நடக்கும் கறுமாந்திரத்தை எல்லாம் பார்த்து காதலே வெறுத்து விட்டது.
காதலித்து திருமணம் செய்த ஒருவரிடம் மனைவிக்கும் தொலைபேசிக்கும் என்ன ஒற்றுமை என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர்,
இரண்டும் கிடைத்த பிறகு தான் நல்ல நல்ல மொடல்கள் எல்லாம் எம் கண்ணில் படும் என்று கூறினார்.
அனேகரின் நிலை சிரித்து சந்தோஷமாய் இருப்பது தான் உண்மையான காதல் என்று.
உண்மையில் எம் துணை அழும் போது சாயத் தோள் கொடுத்து மெதுவாய் தலை கோதி ஆற்றுப்படுத்துவதே உண்மைக்காதல்

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**வடகொரியாவிடம் கள்ளச்சந்தையில் பெற்ற டொலரைக் கொண்டு ஆயுதம் வாங்கிய விடயம் எப்படிப்பட்டது மாமா?**

ஒருவருக்கு கஷ்ட காலம் தொடங்கி விட்டால் அவர் எதைச் செய்தாலும் அது அவருக்கு அவரே வைக்கும் ஆணியாகத்தான் அமையும். அதே விடயம் தான் இப்போது வடகொரிய கள்ளச் சந்தை விடயத்திலும் நடந்திருக்கிறது. அமெரிக்க நாட்டு குடியுரிமை உடைய பிரஜை ஒருவர் அமெரிக்காவினால் தடை செய்யப்பட்ட நாட்டுடன் தொடர்பு வைத்திருக்கின்றார். அதுவும் கள்ளச்சந்தை பணம் ஆயுத விவகாரம்.
அட.. அட.. அட.. நினைக்கவே மெய் சிலிர்க்கிறது. அது சரி இதை எல்லாம் அமெரிக்காவின் உளவுப்பிரிவு இவ்வளவு நாளும் அறியாமல் இருந்திருக்கிறதே. என்ன ஒரு ,தொழில் நுட்பம், என்ன ஒரு இரகசியத்தன்மை.

**சுதன் — குப்பிளான்**

**இலங்கையை சர்வதேச நீதிமன்றில் நிறுத்த இந்தியாவால் முடியுமா வியாசரே?**

நிச்சயம் முடியும். ஆனால் அது நடக்கவே நடக்காது.
இந்த நாட்டின் சிறுமைப்பட்ட இனம் தமிழினம். இதற்கு இந்தியாவல்ல சர்வதேசம் கூட இரங்காது.
இலங்கை உலக வரைபடத்தில் மிக முக்கிய கேந்திர நிலையத்தில் உள்ளது. எனவே இலங்கையை ஆக்கிரமித்தால் அது தமது உலக வல்லரசு கனவை நினைவாக்க முடியும் என்ற நினைப்பு எல்லா நாடுகளுக்கும் உண்டு.
சிறு பிள்ளையை நிலாக்காட்டி சோறூட்டுவது போல தமிழினப் படுகொலையைக் காட்டி இலங்கையை மிரட்டுவார்களே தவிர எதுவுமே நடக்காது. அவ்வாறு நடந்தால் மேற்கே சூரியன் உதிக்கும். அவ்வளவே!

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**021 567 1532**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**தர்சன் — மானிப்பாய்**

**எங்கள் வீட்டுக்குள் ஒருநாள் இரவு பாம்பு ஒன்று வந்துவிட்டது. அதை அடித்துப் போட்டு விட்டேன் தவறா மாமா?**

பாம்புகள் ஒரு நாளும் மனிதர்களை வேண்டும் என்று தீண்டுவது இல்லை. முதலில் மனிதர்கள் அந்த உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும். மனிதன் தன்னைத் தாக்கி விடுவானோ என்று பாம்புக்கு பயம். பாம்பு தன்னைத் தீண்டி விடுமோ என்று மனிதனுக்குப் பயம்.
இந்த இரண்டில் யார் பயம் மேலோங்கி விடுகிறதோ அவர் முந்திக் கொள்வார்.
பாம்புகள் அனைத்தும் விடம் கொண்டவை அல்ல. அவற்றை சரியாக இனம் கண்டு கையாண்டால் அந்த உயிர்களும் பிழைத்துக் கொள்ளும்.
பாம்பு என்றால் படையும் நடுங்கும் என்பது பொய்யல்ல உண்மை.

**சிவம் — வதிரி**

**இலங்கையில் கொரோனாத் தாக்கத்தை விடவும் பொருளாதார தாக்கத்தால் மக்கள் நிலை படுமோசமாக போகப் போகிறது போல உள்ளதே வியாசரே?**

"வயிற்றுக்காக மனிதன் இங்கே கயிற்றில் ஆடுறான் பாரு அவன் ஆடி முடிந்து இறங்கி வந்தா அப்புறம்தான்டா சோறு"
என்ற வாலியின் வரிகளை ஒரு கணம் நினைக்கின்றேன். கண்கள் முட்டி வழிகின்றன.
இறைவா இந்த உலகில் மனிதன் வாழும் வகை செய். நாடு போகக் கூடாவதர்கள் கைகளுக்கு மறுபடியும் போகாமல் பார்த்துக்கொள்.
உழுது, விதைத்து, சீராய் மழை பெய்து, நெல் வளர்ந்து, கதிர் வந்து அது முற்றி அறுவடை செய்து [illegible] நிலை [illegible] போக இடம் கொடாதே இறைவா.

**லட்சிகா — யாழ்ப்பாணம்**

**பரீட்சையில் ஒரு புள்ளியால் வாய்ப்பை இழந்த மாணவர்களை தட்டிக் கொடுக்காமல் தோற்று விட்டான் என கேலி செய்பவர்களை என்னவென்று சொல்ல வியாசரே?**

ஐயாயிரம் அடி உயரத்தில் விமானம் பறந்து கொண்டிருக்கிறது. திடீரென விமானத்தில் ஒரு அறிவிப்பு. இந்த விமானத்தின் விமானிக்கு கற்பித்த ஆசிரியர் இந்த விமானத்தில் இருக்கிறார். அவரை அவரின் மாணவன் கௌரவிக்கப் போகிறார் என.
விமானத்தில் இருந்தவர்கள் அனைவரும் யார்? யார்? என வினவிக் கொண்டிருந்தனர்.
அந்த விமானத்தில் இருந்த ஆசிரியர் ஒருவரும் யாராக இருக்கும் என எண்ணிக்கொண்டிருந்தார். அந்த விமானி அவர் அருகே வந்து அவரின் காலைத்தொட்டு வணங்குகின்றார். அந்த ஆசிரியர் உற்றுப்பார்க்கிறார். அவருக்கு அவர் யார் என்று புரியவில்லை? அப்போது அந்த விமானி கூறுகிறான், நான் தங்களிடம் கற்றவன். உங்களுக்கு என்னை நினைவிலிருக்காது ஏனென்றால் நான் கடைசி வாங்கில் இருந்தேன் என.
அந்த ஆசிரியர் தன்னை மறந்து அவனைக் கட்டி அணைத்து கண்ணீர் சிந்தினார்.

**மதுவன் — மீசாலை**

**காசிக்குப் போகும் கண்ணியாசி நிலை பற்றிக் கூற முடியுமா வியாசரே?**

ஒருவரின் வீட்டில் விலை உயர்ந்த நகைகள் களவு போய்விட்டன. ஆனால் வீட்டு உரிமையாளர் அதற்கு கவலைப்படாமல் கடவுளுக்கு நன்றி கூறிக்கொண்டிருந்தார்.
விடயம் கேள்விப்பட்டு வந்த அவரின் நண்பர் "டேய் வீட்டில் களவு யோயிருக்கிறது பொலிஸீக்கு போகாமல் சிரித்து கொண்டிருக்கிறாய்" என்றார் கடுப்பாக.
அதற்கு நம்மாள் கூறினார். "அட போடா வந்த கள்வன் நகையோட மனிசியையும் கொண்டு போய் விட்டான். இப்ப பொலிஸீக்குப் போனால் பொலிஸ் மனிசியையும் கண்டு பிடிச்சிடுமல்லோ. நகைதானே போனால் போகட்டும் விடு நாம் கப்பியா இருப்போம்" என்றாராம் சிரித்துக் கொண்டு.
(தாய்க்குலங்களே இக்கதை சிரிப்பதற்கு மட்டுமே)


**இராசையா — சாவகச்சேரி**

**தனிமை மிக கொடுமையான வலியைத் தர வல்லது என்பதை உணர்ந்துள்ளீர்களா வியாசரே?**

உண்மை அந்த வலியை உணர்ந்தால் மட்டுமே முடியும். இயந்திர வாழ்க்கை எதற்கும் நேரம் இல்லை. காலையில் எழும்புவது அவசர அவசரமாய் சமையல் செய்து அரை வேகலில் அடுப்பிலிருந்து இறக்கி உண்ட பாதி உண்ணாத பாதி என அந்தரப்பட்டு பிள்ளைகளை இழுத்துக் கொண்டு ஓடிப்போய் பாடசாலையில் விட்டு விட்டு வேலைக்குப் போக வேண்டும்.
இந்த இயந்திர வேலையில் வீட்டில் இருக்கும் முதியவர்களை யாருமே கவனத்தில் கூட எடுப்பதில்லை. முதுமையில் தனிமையின் வலி மிக மோசமானது. அதை உணர்ந்தால் மட்டுமே எல்லாம் மாறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்னம்பிக்கை



மனித வாழ்வில் எத்தனை சவால்கள் வந்தாலும்
தன்னம்பிக்கையுடன் சவாலை எதிர்கொள்ளனும்
எடுத்த காரியத்தை துணிவுடன் செயல்படுத்தனும்
செயல்படுத்தும் போதினிலே தடைகள் ஏற்படலாமே

நிறுவனத்தில் தவறுகளால் நஷ்டம் ஏற்படலாம்
நஷ்டத்தை நினைத்து சோர்ந்து போக முடியுமா
நம்மால் முடியும் என நினைத்தாலே
நிச்சயம் வாழ்வில் முன்னேற முடியுமே

கல்வி கற்கும் போது பற்பல தடைகள் ஏற்படலாமே
தன்னம்பிக்கையுடன் கல்வியைத் தொடர வேண்டுமே
பரீட்சைக்கு முகம் கொடுக்கும்-போதினிலே
பதட்டம் வர இடம் கொடுக்க முடியாதல்லவா

வேலை வாய்ப்பு இல்லையே என ஏக்கம் கொள்ளாதே
நம்பிக்கையுடன் விடா முயற்சி செய்திடு
நிச்சயம் நினைத்த விடயம் நிறைவேறிடுமே
திடமான மனதுடன் நம்பிக்கை ஏணியில் ஏறுடுவாயே
உயர்ச்சியை நோக்கிய பயணம் தொடருமே

எஸ்.பி.தனா,
தெல்லிப்பழை.

## வாழ்வதற்கு

ஏனிந்த நிலை? எதற்கிந்த அச்சம்?
அன்று நாம்.... கொழுத்தும் வெய்யிலில்
காய்ந்து கொட்டும் மழையில் நனைந்து
பனி முட்டத்தில் சிலிர்த்து புளுதியில் புரண்டு
ஓடியாடித் திரிந்த பொழுதுகளிலெல்லாம்...
கிடைப்பது எதுவாயினும்
வயிற்றிலிட்டு பசியாற்றிய
அந்த காலங்களிலும் எங்கே இருந்தன
இக் கொடும் வைரசுகள்?
சார்ஸ், எபோலா, கொரோனா, டெல்டா...
புதிது புதிதாய் இன்னும் எத்தனையோ!
கொத்துக் கொத்தாய் மானிடரை
வாட்டும் நிலை கண்டு உலகம் கதி கலங்க
ஏனின்று இந்நிலை?
எப்படி இப்போது மட்டும்!
அச்சமின்றி சிட்டுக்களாய்
கல்விச்சாலை சென்று பயின்று வந்த
பிஞ்சுகளெல்லாம் பீதியுடன்
பள்ளி செல்ல சாபமிட்டது எத்தெய்வம்?
இல்லை நாம் தான் காரணம்
ஆம் மனிதனுக்கு மனிதனே
எதிரியானது தான்
புதிது புதிதான கண்டு பிடிப்புக்களால்
கொடிய நோய்க் கிருமிகள் உருவாக்கம்
இயற்கையோடு போட்டியிட்டு
இயற்கையை வெல்லும் செயல்களால்
பேரிடர்கள் பல்வேறு வடிவில்
ஆயினும் இயற்கையை வென்றதாய்
ஆணவ பெருமிதமெமக்கு
ஆதிக்க திமிர்த்தனம் நமக்கு

சி.இ.அன்புதுரை
சம்மட்டியோலை, மானிப்பாய்.

## தீயினிலே

உண்ணும் உணவுகூட
உள் நுழைய மறுக்குதடி
உன் நினைவு தானடி
என் நெஞ்சை இறுக்குதடி

புல் வயல் வெளிகள்
உன் நினைவலைகள்
புரண்டு எழுகின்றேன்
புலம்புகிறேன்

உள்ளம் என் நினைவில் நீ
உயிரில் கலந்துவிட்டாய்
அல்லும் பகலும் கவிதைகளில் நீ
அகண்டு விரிந்து நின்றாய்
சொல்லும் பொருளும் நீ
சோகம் விதைத்து விட்டாய்

கள்ளச் சிரிப்புதனைக் காட்டிவிட்டு
மூங்கில் காடு வழி
உரசிச் சென்றாய்
மூண்டது தீ...
தீயுடன் நான் என் இதயம்
இரண்டும்
இரண்டறக் கலக்கிறது

தீ வளி தீயாகும் போது கூட
நீ சென்ற வழிதனையே பார்க்கிறேன்
நீ சென்றுவிட்டாய்...
மூங்கில்காடு மூண்டு முடிந்துவிட்டது
மூங்கில்கள் புல்லாங்குழலாகிறது
புயல் தென்றலாகிறது
தென்றலுடன் புல்லாங்குழல் சங்கமமாகிறது

புல்லாங்குழலின் ரீங்காரம்
என் இதயம் சொல்வது போல்
உன் பெயரையே உச்சரிக்கிறது

மாவை.நா.கஜேந்திரன்

## மௌனத்தின் தேடல்- 549




## நீங்காத நினைவுகள்

திராவிடச் சிற்பக் கலை வடிவத்துடனான
தமிழ் மண்ணின் சரித்திர பொக்கிஷத்
தினை வஞ்சக நெஞ்சத்து வன்
முறையால் அழித்தாலும் அழியதா
தொன்றாய் எரித்தாலும் எழில் மிகு
தோற்றத்துடனாய் தமிழன்னையின்
வரலாற்று நூலகமாகவும் பார்
முழுவதும் இன்றும் ஒளி வீசுகின்றதே
பைந்தமிழ் புகழின் படிப்பகமாகவே

தங்கத் தமிழன்,
காரைநகர்.

## மௌனத்தின் தேடல்- 550



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்

## தெய்வம் நின்றறுக்காதா?

தமிழ் மண்ணின் தாய் வழி உரிமை அழிக்க
தக்கதா நூலகத்தை தகனித்தது நீதியா
யுத்த அறம் மீறி குண்டுகள் கொட்டும்
கொடுமை அரசின் உணவு மருந்து மறுத்து
செஞ்சிலுவை சங்கத்திற்கு சதி செய்து
சாதித்தது தெய்வம் நின்றறுக்காதா...

சாமிபுத்திரன்
சரவணை.

## திருப்படா

ஒய்யாரமாக ஈர் உருளிதனை
மிதித்திடும் பள்ளி செல் பாலகா
ஒரு கணம் ஒரு மனதுடன் சிந்தனை
செய்திடடா காலங்களை அவமாக்காதே
போன பேருந்து போனதடா
அதே போன்று இழந்த கல்வி இழந்ததடா
அறிவு அற்ற தமிழ் மகன்
ஆருமற்ற அநாதையடா
ஆகவே நல்ல நூல்களை கற்றிட
வண்டியை நூலகத்திற்கு திருப்படா

எஸ்.உமாசிவம்
வவுனியா.

## நாளைய பேரறிஞர்

உலகில் எங்கு ஒரு நூலகம்
திறக்கப்படுகிறதோ
அங்கு ஒரு சிறைச்சாலை
மூடப்படுகிறது அறிவுப் பசியோடு
சைக்கிளில் நூலகம் செல்லும்
பள்ளிச் சிறுவனே!
எமக்கு அறிவூட்டும் புத்தகங்களை
நீ தேடிப் படித்திடு நாளை
உலகில் நீயும்
ஒரு பேரறிஞர் அண்ணா
ஆகிடுவாய்

சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை.

## யுத்த தர்மத்தை

யுத்த தர்மத்தை மீறிய புத்தம்
செத்த அரசியலில் சிங்க யுகம்
பெத்த தாயிருக்க உயிருடன்
கொள்ளி செருகிடும் பேதையர்
கைகளில் ஆட்சி அதிகாரம்
வைத்திய சாலைகள்
வாசிக சாலைகள்
வாங்கிய குண்டுகள்
பைத்தியக் காரரின் பாதகமோ...

கார்வண்ணன்
காவலூர்.

## ஆரோக்கியம்

கற்க கசடற கற்ற பின் அதற்கு தகுந்து நட
கல்வி இல்லாமல் எதுவுமில்லை
ஏட்டுக் கல்வி மட்டுமே வாழ்க்கை அல்ல
கண்டதை கற்றவனேதான் பண்டிதன் ஆவான்
கோயில் இல்லா ஊரில்
குடியிருக்க வேண்டாம்
இல்லை இல்லை நூல்
நிலையம் இல்லா ஊரில் தான்
குடியிருக்க வேண்டாம் என்று
சொன்னவன் நானே கற்றவனுக்கு
துவிச்சக்கர வண்டி மட்டும் தானே
ஆரோக்கியமாக...

இரா.ஜெ.துஷ்யந்தா
மாதகல.

## ஏது என்ன?

கரங்கள் இரண்டாலும் நயனங்கள் மறைத்து மௌன மொழி
பேசும் மாதே மெய்யைச் செப்பிடு மாசைக் களைந்து விடு
காணவொணாக் காட்சிக்காகவா? அன்றி பாரினிலே கட்டுக்
கடங்கா அக்கிரமங்களுக்கா? பார்த்து விடு ஏது என்ன?


கவிக்கோ
வவுனியூரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

**வெள்ளிக்கிழமைகளில், முகாமி லிருந்த சில தமிழர்கள் காலையில் சாப்பிட மாட்டார்கள். விரதமிருப் பார்கள். தங்களது ஊர்க் கோயில் கடவுள்களை நினைத்து, இங்கு வேண்டுதல்கள் செய்தார்கள். வெளி யிலிருந்து தங்களைப் பார்க்க வந்து போகும் விருந்தினர்களிடம், மெல் போர்ன் கோயிலில் அர்ச் சனை செய்யச் சொன்னார்கள். சிலர் ஊரிலுள்ள கோயிலில் பொங்கு வதற்கும், அன்னதானம் கொடுப்ப தற்கும் கூட ஏற்பாடு செய்தார்கள்.**

## வலி சொல்லும் தொடர்... 20




நீதனின் நினைவுகள் இந்தோனேசிய தேசத்தில் அங்கலாய்க்கும் அலைகளாகப் புரண்டபடியிருந்தன. அந்தரிக்கும் இரண்டு உயிர்களின் மீதும், அனீஸா சுமக்கும் தன் உயிரின் பாதியிலும் ஒவ்வொரு கணமும் இமைத்து இளைத்தான். பயணம் தந்த வெப்பமான அனுபவமும், குயிலன் குடும்பத்தின் கடும் துயரும் கண்முன்னால் கனன்று எரிந்தன.

இந்தப் பயணம் இவ்வளவு கடுமையாகத் தன்னை எரித்து விளையாடும் என்று நீதன் ஒரு போதும் நினைத்திருக்கவில்லை. கடல் பெரும் விடமாய் தனக்குள் சுரந்து வடிந்ததை எண்ணும் போதெல்லாம் வெருண்டான். தனியாக வந்து இப்படியொரு வாழ்வுக்குள் சிக்குண்டிருப்பதைவிட, அனிஸாவின் அருகிலிருந்து எல்லாச் சிக்கல்களையும் எதிர்கொண்டிருக்கலாமோ என்ற கேள்வி, ஒவ்வொரு நொடியும் நினைவில் வந்து மறைந்தது.

இன்னொரு மண்ணில் - இன்னொரு மனிதர்களின் முன்னால் - நினைவுகளைச் சரியாக செரிமானம் செய்துகொள்ளக்கூட முடியாமல் தவித்தான்.

ராத்திரிகளின் அமைதியும், விளக்கணைத்த பிறகு தனக்கென்று காத்திருக்கும் 'அல்பா' கம்பவுண்ட் படுக்கையும் தான் அழுவதற்குக் கூட முகாமில் சிறு சுதந்திரத்தைத் தந்தன.

அன்று வழக்கம்போன்ற காலைச் சந்திப்பு குடிவரவு அமைச்சின் அலுவலகத்தில் ஆரம்பமானபோது, அங்கு நீதனின் படம் போட்ட கோப்போடு அதிகாரி ஒருவர் அறைக்குள் நுழைந்தார். முகாம் தொடர்பான வழக்கமான அம்சங்கள் தான் முதலில் பேசப்பட்டன. எனக்கோ, மேசையிலிருந்த நீதனின் படம் போட்ட கோப்பிலேயே கவனம் குவிந்திருந்தது.

அந்த விடயத்துக்கு பேச்சு எப்போது வரும் என்பதற்காக அத்தனை அதிகாரிகளின் உதடுகளையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

"சார்ளி கம்பவுண்டில் இரண்டு பெண்கள் நேற்றிரவு ஏன் இரவுணவு சாப்பிடவில்லை என்பது தொடர்பாக விசாரித்தீர்களா?"

"ஆம்! அவர்கள் மாலையே விருந்தினர் கொண்டுவந்த சாப்பாட்டை, விருந்தினர்களோடு சேர்ந்து விருந்தினர் மண்டபத்தில் சாப்பிட்டதை அதிகாரிகள் கவனித்திருக்கிறார்கள்."

"அந்தத் தகவல் உண்மைதானா... அவர்கள் சாப்பிட்டதைக் கவனித்தீர்களா? அவர்கள் திடீரென்று இரண்டு நாள்கள் கழித்து வந்து, 'நாங்கள் உண்ணாவிரதமிருக்கிறோம்' என்று சொல்லிவிடுவார்கள் கவனம். ஊடகங்களில் செய்தி வந்தால், குடிவரவு அமைச்சுக்குத்தான் இழுக்கு."

முகாமில் யாராவது தொடர்ச்சியாக மூன்று வேளை உணவு உட்கொள்வதைத் தவிர்த்துக் கொண்டால், அவர்கள் உண்ணா விரதமிருப்பதாகவே கருதப்படுவர்.

அவர்கள் தொடர்பாக உடனடியாக குடிவரவு அமைச்சுக்கு அறிவிக்க வேண்டும்.

இந்தச் செய்தி குடிவரவு அமைச்சுக்குப் போனால், முகாமிலுள்ள வைத்திய அதிகாரிகளுடன் இணைந்து, குறிப்பிட்ட அகதியைச் சிறப்புச் சந்திப்புக்கு அழைத்து, காரணத்தைக் கேட்பார்கள். அநேகமாக, இவ்வாறு சாப்பாட்டைத் தவிர்ப்பவர்கள், தங்களது நீண்டநாள் தடுப்பு முகாம் வாழ்க்கைக்கு எதிரான அதனால் ஏற்பட்ட விரக்தியை - காரணமாகக் கூறுவார்கள். இன்னும் பலர், தங்களுக்கு விசா கிடைக்கும் வரைக்கும் சாப்பிட மாட்டோம் என்று கூறுவார்கள்.

இப்படியான காரணங்களுக்கெல்லாம், குடிவரவு அமைச்சு உருட்டிப் பிரட்டி ஏதாவது ஒரு பதில் காரணத்தைச் சொல்லி சமாளித்துவிடுவார்கள். அடுத்த சந்தியில் விசா காத்துக் கொண்டிருப்பதைப் போலவும், அதை எப்படியாவது தாங்கள் போய் அழைத்து வந்துவிடுவதைப் போலவும் சத்தியம் கொடுத்து, சம்பந்தப்பட்ட அகதிக்கு அலுவலகத்தில் வைத்தே சிரித்துப் பேசி சாப்பாட்டை ஊட்டி அனுப்பிவிடுவார்கள்.

ஆனால், சில வேளைகளில் முகாம் உணவறையில் சாப்பாடு சரியில்லை என்று, யாராவது அகதி மூன்று வேளை சாப்பிடாமல் இருந்துவிட்டால், எங்களது தலைகள் உருளும். முகாமுக்கான பாதுகாப்பு அமைப்பு என்ற கோதாவில், குடிவரவு அமைச்சு எங்களை அழைத்து வைத்து, விரிவான சமையல் விசாரணையொன்றை நடத்த ஆரம்பிக்கும்.

அதுதான், மரண வேதனையாக இருக்கும். முகாம் உணவறையில் கடந்த மூன்று நாள்களாகக் கொடுத்த சாப்பாடுகள் என்னென்ன... அவற்றை விரும்பிச் சாப்பிட்டவர்கள் யார்... முகம் சுளித்தவர்கள் யார்... அதைச் சாப்பிட்ட யாருக்காவது வயிற்றுப் பிரச்சினை ஏற்பட்டதா, வாய்வுப் பிரச்சினை ஏற்பட்டதா என்று பட்டியல்போட்டு, படாதபாடு படுத்துவார்கள்.

இதற்காகவே முகாமில் தினமும் இறுக்கமான நடைமுறை பின்பற்றப்படும். முகாமிலுள்ளவர்களின் படங்களுடன் கூடிய பட்டியல், முகாம் உணவு மண்டப வாசலில் அதிகாரிகளிடமிருக்கும். மூன்று வேளையும் சாப்பாட்டுக்காக உணவு மண்டபம் திறக்கப்படுகிறபோது, அங்கு சாப்பிட வருபவர்கள் அனைவரும், அவர்களின் பெயருக்கு முன்னால் 'டிக்' செய்யப்படுவார்கள். உணவு மண்டபத்துக்கு வராதவர்கள், அவர்களது அறைகளுக்கோ அல்லது முகாமின் எந்த மூலையிலிருந்தாலோ சென்று சாப்பாட்டு விசாரணை செய்யப்படுவார்கள். பிரதான உணவை உட்கொள்ளா விட்டாலும், பாணோ, பழமோ சாப்பாட்டிருந்தால் எமது வேலை சுலபமாக முடிந்துவிடும்.

இல்லையென்றால், அடுத்த நாள் குடிவரவு அமைச்சு அலுவலகத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்கு, சரியான பதில்களோடு போக வேண்டும். யாரோ உண்ணாவிரதமிருந்தாலும், உருட்டப்படுபவர்கள் முகாமின் பாதுகாப்பு அதிகாரிகளாகிய நாங்களாகவே முன்னிலைப்படுத்தப்படுவோம்.

குடிவரவு அமைச்சைப் பொறுத்தவரை, த்தாங்கள் விசா கொடுக்காமல் அகதிகளை முகாமில் தடுத்துவைத்திருந்தாலும், முகாமில் அகதிகளின் நடவடிக்கையில் என்ன மாற்றம் தெரிந்தாலும், அதற்கு பாதுகாப்புக் கொடுக்கும் நாங்களே பொறுப்பு என்ற தோரணையில் எங்களைச் சலவை செய்து எடுப்பார்கள். அது அவர்களுக்கு ஒரு சடங்காகிப்போனது.

வெள்ளிக்கிழமைகளில், முகாமிலிருந்த சில தமிழர்கள் காலையில் சாப்பிட மாட்டார்கள். விரதமிருப்பார்கள். தங்களது ஊர்க் கோயில் கடவுள்களை நினைத்து, இங்கு வேண்டுதல்கள் செய்தார்கள். வெளியிலிருந்து தங்களைப் பார்க்க வந்துபோகும் விருந்தினர்களிடம், மெல்போர்ன் கோயிலில் அர்ச்சனை செய்யச் சொன்னார்கள். சிலர் ஊரிலுள்ள கோயிலில் பொங்குவதற்கும், அன்னதானம் கொடுப்பதற்கும் கூட ஏற்பாடு செய்தார்கள். எப்படியாவது, தங்களது குலதெய்வம், ஆஸ்திரேலியாவில் ஒரு விசா எடுத்துத் தந்துவிடும் என்று உருக்கமாக நம்பினார்கள்.

இப்படிப்பட்ட பக்தியான அகதிகள், வெள்ளி காலையில் சாப்பிடாவிட்டாலும் மதியம் சாப்பிடுகிறார்களா என்பதைக் கலைத்துப் பிடித்துக் கேட்டு உறுதி செய்துகொள்வதில், அதிகாரிகளுக்கு நாக்குத் தள்ளிவிடும். என்னோடு தமிழ் அகதிகளுக்கு மொழிப் பிரச்சினை இருந்ததில்லை. ஆக, அவர்கள் விரதமிருக்கப்போகிறார்கள் என்றால், அதற்கு முன்னமே என்னிடம் சொல்லிவிடுகின்ற வழக்கத்தைக் கொண்டிருந்தார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

## அந்தரங்க அறையில்...




**கா**ண்பது கனவா அல்லது எதிரில் வந்திருப்பது உண்மைத் தோற்றம்தானா? இருப்பது சொர்ண பூமியின் அக்ஷயமுனையா அல்லது கலிங்கத்தின் பாலூர்ப் பெருந்துறையா?" என்ற சந்தேகம் இளையபல்லவன் இதயத்தில் எழுந்து அவன் சித்தத்தை எல்லையற்ற பிரமிப்புக்கும் குழப்பத்துக்கும் உள்ளாக்கியதென்றால், அதற்குக் காரணம் இருக்கத்தான் செய்தது.

அத்தனை ஏமாற்றத்தையும் சந்தேகத்தையும் அளித்தான் கோடியிலிருந்த கதவொன்றைத் திறந்து கொண்டு அறைக்குள் நுழைந்த அந்தக் கோட்டைத் தலைவன். இளையபல்லவன் கற்பனை செய்த கோலத்துக்கு முற்றும் மாறாக அவன் தோற்றமிருந்ததன்றி, சொப்பனத்திலும் நினைக்க முடியாத மற்றொருவன் சாயலும் கோட்டைத் தலைவனுக்கு இருக்கவே சில விநாடிகள் ஸ்தம்பித்தே போனான் சோழர் படைத் தலைவன்.

அக்ஷயமுனையைப் பற்றிக் கீழ்த்திசையெங்கும் பரவிக் கிடந்த பயங்கர வரலாற்றை வைத்து, அதன் வாசிகளையும் கோட்டையின் தலைவனையும் எடை போட்டிருந்த இளையபல்லவன், தலைவன் அறைக்குள் தான் தனித்திருந்த சில நிமிடங்களில் வெளிநாடுகளில் உலாவிக் கிடந்த வதந்தியில் தவறேதுமில்லை என்றே எண்ணினான்.

அந்த அறை ஸ்ரீவிஜய சாம்ராஜ்யத்தின் ஒரு மூலையிலிருந்த சாதாரணத் துறைமுகக் காவலனின் அறைபோலில்லாமல் பெரும் சாமராஜ்யாதிபதியின் அந்தரங்க அறைபோலிருந்ததையும், அதன் தூண்கள் கூடத் தங்கத் தகடுகளால் மூடப்பட்டிரந்ததையும், சுவர்களில் ஆங்காங்கு இருந்த சிறு வெள்ளிப் பட்டயங்களில் எழுப்பப்பட்ட பல செய்திகள் எந்த மனிதனது உரத்தையும் வீரத்தையும் உலுக்கி விடும் தன்மை பெற்றிருந்ததையும் பார்த்த இளையபல்லவன், பெரும் கொள்ளைக்காரனும் இதயமற்ற கொலைகாரனுமான ஒரு பரம அயோக்கியனின் இருப்பிடத்துக்குத் தான் வந்துவிட்டதைச் சந்தேக மறப் புரிந்து கொண்டான்.

அக்ஷய முனைக்கு வந்து பெரும் மரக்கலத் தலைவர்களாக விளங்கி, பெரும் தனத்தைக் கொண்டு வந்தவர்கள் திடீர் திடீரென மறைந்து விட்டதற்கு அனுதாபம் தெரிவிக்கும் முறையில் சுவர்களில் காணப் பட்ட வெள்ளிப் பட்டயங்களில் வாசகங்களிருந்தன. அந்தப் பட்டயங்களின் தலையில் மாண்ட அந்த மாலுமிகள் சின்னஞ்சிறு தலைகளும் சித்திரங்களாகத் தீட்டப்பட்டிருந்தன.

அந்தப் பட்டயங்களை அந்த அறையில் அக்ஷய முனைத் தலைவன் பதித்திருந்ததன் காரணத்தைப் பற்றி எத்தகைய சந்தேகமும் ஏற்படவில்லை இளையபல்லவனுக்கு. அவற்றிலிருந்த தலைகளின் சித்திரங்கள் தன்னைப் போல் வரும் புது மரக்கலத் தலைவர்களை அச்சுறுத்துவதற்கேயென்பதையும் பட்டயங்களில் அனுதாபம்போல் எழுதப் பட்டிருந்த வாசகங்களில் பலத்த எச்சரிக்கையும் அடங்கியிருப்பதையும் கவனித்த இளையபல்லவன், கோட்டைத்தலைவன் பெரும் கொலைகாரன் என்பது மட்டுமின்றி, சாமர்த்தியமான கொலைகாரனுங் கூட என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

தவிர, கோட்டைத் தலைவன் கொலையையே ஒரு கலையாக மாற்றிக் கொண்டு அதன் சக்தியிலேயே வளர்ச்சியடைந்திருக்கிறானென்பதையும் அறிந்து கொண்டானாகையால், பெரும் ராட்சதன் ஒருவனைத் தான் சந்திக்க நேரிடுமென்ற எண்ணத்துடனேயே அந்த அறையில் காத்திருந்தான்.

ஆனால் தன் நினைப்புக்கு நேர் மாறாக, நல்ல உயரமுள்ள ஒற்றை நாடியாகச் சிவந்த சரீரத்துடன் ராஜகளை பொருந்திய ஒரு மனிதன் முகத்தில் புன்முறுவல் தவழ உள்ளே நுழைந்ததும், பெரும் பிரமிப்புக்குள்ளான இளைய பல்லவன் சற்று அவனைக் கவனித்ததும் உள்ளே துள்ளி யெழுந்த பல உணர்ச்சிகளுக்கு இலக்கானாலும் ஆசனத்தை மட்டும் விட்டு எழுந்திருக்கவில்லை.

இதே நிலை ஒரு வருடத்துக்கு முன்பிருந்தால் துள்ளி எழுந்திருப்பான், சொற்களைப் படபடவெனப் பொரிந்தும் தள்ளியிருப்பான். ஆனால் பெரும் நிதானத்தை அடைந்துவிட்ட படைத்தலைவன் அந்த நேரத்தில் ஆசனத்தை விட்டு எழுந்திருக்கவுமில்லை, தனது படபடப்பைக் காட்டவுமில்லை. அவன் புருவங்களின் சலனங்களில் மட்டுமே அந்த வியப்பு தெரிந்தது. அறைக்குள் நுழைந்தவன் காஞ்சனாதேவியின் தந்தையான குணவர்மனேயென ஆரம்பப் பார்வையில் தீர்மானித்து விட்ட இளைய பல்லவன் அத்தகைய அதிர்ச்சியும் பிரமிப்பும் அடைந்ததில் ஆச்சரியமென்ன இருக்கிறது?

அறைக்குள் நுழைந்த கோட்டைத் தலைவன் அசல் குணவர்மனைப் போலவே தோற்றத்திலிருந்ததன்றி அவன் நடையும் கடாரத்தின் அதிபனை நூற்றுக்கு நூறு ஒத்திருந்தது. அதே விசால வதனம், அதே ராஜ தோரணை, சுருண்ட தோளில் தொங்கிய அதே தலை முடி. நீண்ட மெல்லிய கைகள்! வித்தியாசம் எதுவுமே இல்லை குணவர்மனுக்கும் கோட்டைத் தலைவனுக்கும்! இப்படிக் குணவர்மனை உரித்து வைத்தது போல் அறைக் கோடிக் கதவின் மூலம் நுழைந்த கோட்டைத் தலைவனைக் கண்டு சில விநாடிகள் பிரமித்து ஸ்தம்பித்துவிட்ட இளைய பல்லவன் கூடிய சீக்கிரம் சுயநிலையை அடைந்து நன்றாக எதிரே வந்தவனை அளவெடுக்க ஆரம்பித்தான்.

குணவர்மனும் கோட்டைத் தலைவனும் பார்வைக்கு இரட்டையர் போல் இருந்தாலும் சில முக்கிய வித்தியாசங்கள் இருவருக்கும் இருப்பதைச் சில விநாடிகளின் ஆராய்ச்சிகளுக்கு பின் அறிய முடிந்தது இளையபல்லவனால். முகத்தில் அதே ராஜ தோரணைதான். இருந்தாலும் பலத்த கடுமை இருந்தது அதில். கண்கள் அதே கருமை நிறம், விசாலம் இருந்தாலும் குணவர்மன் கண்களிலிருந்த ஏக்கம், துறவு மனப்பான்மை இரண்டும் கோட்டைத் தலைவன் கண்களில் இல்லை. அவற்றுக்குப் பதில் பெரும் குரூரமும் வஞ்சகமும் கலந்திருந்தன. இளையபல்லவனைக் கண்டதும் அவன் இதழ்களில் விரிந்த புன்னகை முதல் தோற்றத்துக்கு இன்பமாகத் தோன்றினாலும் அதில் பொய்யும் வஞ்சகமும் புதைந்து நின்றன. வந்ததும் அவன் பேசிய இரண்டொரு சொற்களும் அவன் பரம அயோக்கியனென்பதை நிரூபித்தன.

பேசிய சொற்கள் மரியாதை நிரம்பியவைதான். காதுக்குக் குளிர்ச்சியாகவும் இருந்தன. இருப்பினும் மனிதனுடைய குணத்துக்குச் சொல்லப்படும் வடமொழி சுலோகமே இளையபல்லவன் நினைப்புக்கு வந்தது.

பங்கஜத்தைப்போல் விரிந்து வரவேற்கும் முகம், சந்தனத்தைப் போல் குளிர்ந்திருக்கும் சொற்கள், வஞ்சகம் நிறைந்த நெஞ்சம், இம்மூன்றும் , அயோக்கியனுடைய லக்ஷணங்கள் என்ற கவிதையை ஒரு முறைக்கு இரண்டு முறையாகத் தனக்குள் சொல்லிக்கொண்ட இளைய பல்லவன் கோட்டைத் தலைவனுக்கும் அந்தச் சுலோகத்துக்கும் பொருத்தம் நூற்றுக்கு நூறு என்று தீர்மானித்துக் கொண்டாலும், அந்த எண்ணங்களை அணுவளவும் முகத்தில் காட்டாமல், கோட்டைத் தலைவன் உள்ளே, நுழைந்ததும் ஏற்பட்ட திகைப்பை இரண்டொரு விநாடிகளில் சமாளித்துக் கொண்டு புன்முறுவல் செய்தான்.

அத்தனை துரிதமாக இளையபல்லவன் தன் ஆரம்பத் திகைப்பையும் எண்ணங்களையும் மறைத்தும் கூட அவன் உணர்ச்சிகளை நொடிப்பொழுதில் கவனித்து விட்ட கோட்டைத் தலைவன், இன்பப் புன்முறுவல் தவழ்ந்த இதழ்களுடன் அறைக்கோடியிலிருந்து நடுவிடத்துக்கு வந்து பெரும் அதிர்வெடியொன்றை எடுத்துப் படைத்தலைவன் மீது வீச முற்பட்டு, "அக்ஷய முனைக்கு இளையபல்லவன் வருகை நல்வரவாகட்டும்." என்று சர்வசாதாரணமாக வரவேற்புக் கூறி எதிரேயிருந்த நவரத்தினாங்கள் இழைக்கப் பெற்ற ஆசனத்தில் அமர்ந்து கொண்டான்.

அக்ஷயமுனையின் தலைவன் பேசிய மொழி சொர்ண பூமியின் காவி பாஷையாயில்லாமல் தூய்மையான தமிழாயிருந்தது பற்றி மட்டுமின்றித் தன் பெயரையும் அவன் அறிந்து கொண்டிருப்பது பற்றிப் பேராச்சரிய மடைந்தான் இளைய பல்லவன். இந்த அறைக்கு வரும் வரை நான் பெயரை யாருக்கும் சொல்லாதிருக்க இவனுக்கு எப்படி என் பெயர் தெரிந்தது!" என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாலும் அதைப்பற்றி வெளிப்படையாக எந்த உணர்ச்சியையும் காட்டாமல், "எனக்கு இரட்டைப் பாக்கியம் ஏற்பட்டிருக்கிறது." என்று பதில் கூறி வணக்கத்துக்கு அறிகுறியாகத் தலையையும் தாழ்த்தனான் இளையபல்லவன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒரு மரத்தை குலதெய்வமாகக் கும்பிடும் குக்கிராமம் அது. அந்த கிராமத்தை சேர்ந்த விவசாயி, மாயாண்டி தனக்குச் சொந்தமான நிலத்தை தானே உழுது விவசாயம் செய்கிறார். அவருடைய நிலத்தை கையகப்படுத்த இரண்டு பேர் பணத்தை காட்டி, ஆசை வார்த்தை பேசுகிறார்கள்.

அதற்கு மாயாண்டி மயங்காமல் விவசாயம் செய்வதில் உறுதியாக இருக்கிறார். ஆசை வார்த்தை பேசியவர்கள், மயில்களை கொன்று மாயாண்டியை பிரச்சினைக்குள் சிக்க வைக்கிறார்கள். பிரச்சினை கோர்ட்டுக்குப் போகிறது. மாயாண்டி ஜெயிலில் அடைக்கப்படுகிறார். இறுதியில் அவர் விடுதலை செய்யப்பட்டாரா? இல்லையா? என்பதே மீதிக்கதை.

மாயாண்டியாக நல்லாண்டி என்ற முதியவர் வாழ்ந்து இருக்கிறார். அவர் நடித்தது போலவே இல்லை. அவரை நடமாடவிட்டு படம் பிடித்தது போல் இருக்கிறது. அவர் தொடர்பான வசனங்களும், காட்சிகளும் இயல்பாக உள்ளன.

பிரபல நகைச்சுவை நடிகர்கள் யாரும் இல்லாமலே வசன காட் சிகள் தியேட்டரை அதிர வைக் கின்றன. கோர்ட்டில் வெள்ளந் தியாக அவர் பேசும் போது, சிரிக்கவும் வைக்கிறார். சிந்திக் கவும் தூண்டுகிறார்.

விஜய் சேதுபதி கௌரவ வேடத்தில் நடித்து இருக்கிறார். கைகளில் துணிப்பைகளை தூக்க முடியாமல் தூக்கி வரும் பாதி மன நோயாளியாக அனுதாபத்தை சம்பாதிக்கிறார். அவருடைய முடிவு, எதிர்பாராதது.

யானைப்பாகனாக யோகி பாபு, மாஜிஸ்திரேட்டாக ரேய்ச்சல் ரெபேக்கா ஆகிய இருவரும் இதயம் கவர்ந்த இதர கதாபாத்திரங்கள். இந்தக் கதைக்கும் ஒரு கிளைமேக்ஸ் உண்டு என்று காட்டியிருப்பது சுவாரஸ்யம். மணிகண்டனே ஒளிப்பதிவு செய் திருப்பதால் இன்னும் அழகாக இருக்கிறது. சந்தோஷ் நாராயணனின் பின்னணி இசை பல இடங்களில் பொருத்தமாக ஒலிக்கிறது.

பல ஆண்டுகளாகப் பயிர்கள் மீது அமிலத்தை ஊற்றியிருப்பதை ஆவணப்படுத்தியிருக்கிறார் மணிகண்டன். இரண்டரை மணி நேரம் ஒரு கிராமத்தில் வாழ்ந்தது போன்ற உணர்வை ஏற்படுத்தி விடுகிறார் மணிகண்டன். இந்த கதைக் களத்தில் கிராமத்தின் நாடி நரம்புகளையெல்லாம் நமக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார். மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகள் நம் வாழ்க்கை யில் எப்படியெல்லாம் நுழைந்திருக்கிறது என்பதையும், இரசாயன உரங்களின் தாக்குதல் எப்படிப் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதையும் உணர்வுபூர்வமாகச் சொல்லியிருக்கிறார்.

மொத்தத்தில் 'கடைசி விவசாயி' உயிரோட்டம்.

# கண்ணீர் அஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 12 – 01 – 1934 | 10 – 02 – 2022 |

வலம்புரி-சுகமான விடியல் கட்டுரை ஆசிரியர்,

பொது வைத்திய நிபுணர் Dr.சி.சிவன்சுதன் அவர்களின் அன்பு மாமனார்

## திரு.சின்னப்பா கனகரத்தினம்

(Retired Assessor, Incometax Department)

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலம்புரி நிர்வாகம்

# ஒரு நிமிடத்திற்கு 12 கோடி

தெலுங்கு திரையுலகில் முன்னணி நடிகராக விளங்கி வருபவர் மகேஷ்பாபு. இவரின் திரைப்படங்கள் எப்போதும் பெரியளவில் வரவேற்பைப் பெற்று வெற்றியடைந்து வருகின்றது.

இந்நிலையில் நடிகர் மகேஷ்பாபு நடித்திருந்த குளிர்பானம் விளம்பரம் ஒன்று சமீபத்தில் வெளியாகி இருந்தது.

தற்போது அந்த விளம்பரத்தில் நடிப்பதற்காக நடிகர் மகேஷ்பாபு வாங்கிய சம்பளம் குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி அவர் அந்த விளம்பரத்தில் நடிப்பதற்காக 12 கோடி ரூபாய் சம்பளம் வாங்கியுள்ளதாக தெரிய வருகின்றது.





அவசரப் பணத் தேவைக்கு
உதவும் நம்பகமான உறவினர்

உங்கள் தங்க ஆபரணங்களுக்கு அதிஉயர் முற்பணத் தொகையுடன்

- 0.71% ஆகக் குறைந்த மாதாந்த வட்டி
- நட்புறவுடன் கூடிய செயற்திறன் மிக்க சேவை
- மீண்டும் மீண்டும் புதுப்பிக்கும் வசதி
- தேவைக்கேற்ப மீள செலுத்தும் வசதி
- மறைமுக கட்டணங்கள் இல்லை
- உங்கள் இரகசியத் தன்மைக்கான பாதுகாப்பு உத்தரவாதம்

BOC ரண் சுரேக்கும் கடன்சேவை

மேலதிக விபரங்களை அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : எல்லோரும் நல்லவரே
இயற்றியவர் : புலமை பித்தன்
இசை : வி.கே.குமார்
பாடியவர் : கே.ஜே.ஜேசுதாஸ்



பகை கொண்ட உள்ளம்
துயரத்தின் இல்லம்
தீராத கோபம் யாருக்கு லாபம்
தீராத கோபம் யாருக்கு லாபம்

பகை கொண்ட உள்ளம்
துயரத்தின் இல்லம்
தீராத கோபம் யாருக்கு லாபம்
தீராத கோபம் யாருக்கு லாபம்

வீட்டுக்கு வெளிச்சம் வருவதற்காக
கூரையை எரிப்பாரோ

வேதனை தன்னை
விலை தந்து யாரும்
வாங்கிட நினைப்பாரோ
வாங்கிட நினைப்பாரோ

இதயத்தை திறந்து நியாயத்தை பேசு
இதயத்தை திறந்து நியாயத்தை பேசு

வழக்குகள் முடிவாகும்
இருக்கின்ற பகையை

வளர்த்திடத்தானே
வாதங்கள் துணையாகும்

பகை கொண்ட உள்ளம்
துயரத்தின் இல்லம்
தீராத கோபம் யாருக்கு லாபம்
தீராத கோபம் யாருக்கு லாபம்

வற்றிய குளத்தை பறவைகள் தேடி
வருவது கிடையாது
வாழ்க்கையில் வறுமை வருகின்ற போது
உறவுகள் கிடையாது
உறவுகள் கிடையாது

பாலைவனத்தில் விதைப்பதனாலே
பாலைவனத்தில் விதைப்பதனாலே
பயிர் ஒன்றும் விளையாது
பட்ட பின்னாலே வருகின்ற ஞானம்
யாருக்கும் உதவாது

பகை கொண்ட உள்ளம்
துயரத்தின் இல்லம்
தீராத கோபம் யாருக்கு லாபம்
தீராத கோபம் யாருக்கு லாபம்

# முதலில் கோப்பையைக் கேளுங்கள் பின் சோற்றுக்காகப் போராடுங்கள்

**கடந்த கால கசப்பான சம்பவங்களை அரசியலின் பாடமாக்கிக் கொண்டு சிதறு தேங்காய் போல் நான்கு திசைகளிலும் ஒற்றுமையின்றி எங்கும் சிதறிக் கிடக்கும் ஈழத் தமிழ் அரசியல் தலைமைகள் ஒரு குடையின் கீழ் ஒற்றுமையானால்தான் ஈழத் தமிழ் அரசியலின் எதிர்கால நகர்வுகளை கட்சிகளுக்கு இடையிலான விவாதங்கள் இன்றி கொண்டு நடத்த முடியும். அதை விடுத்து சர்வதேசத்தின் மீதும், இந்தியா மீதும் குற்றம் சுமத்துவதில் எந்த நன்மைகளும் ஈழத் தமிழருக்கு எதிர்காலத்தில் விளையப் போவதில்லை.**

ஈழத் தமிழர்களின் இயற்கைத் தெரிவாக இந்தியா அமைந்திருப்பது போல், இந்திய தேசிய நலனுக்கான இயற்கைத் தெரிவாக ஈழத் தமிழர்கள் இயற்கையாக இலங்கையின் வடக்கு-கிழக்கு இணைந்த தாயகத்தில் அமைந்திருப்பது பிராந்திய புவிசார் அரசியலின் என்றும் மாற்ற முடியாத அரசியல் விதியாகும்.



ஆனால் ஈழத் தமிழ் அரசியலின் ஒரு சில அரசியல் சக்திகள். அந்த இயற்கை விதியை தற்காலிகமாகவேனும் மாற்ற முயற்சிக்கின்றார்களா...? என்ற கேள்வி ஈழத்தமிழரின் மத்தியில் சமகாலத்தில் எழுவது நியாயமான ஒன்றுதான். அப்படி மாற்ற முயற்சிப்பதும் அதை மறுதலிக்க நினைப்பதும் ஈழத் தமிழ் அரசியலின் அயலுறவுக் கொள்கையின் விவேகமற்ற தன்மையையே இது புடம் போட்டு காட்டுகிறது.

இயற்கையை முற்று முழுதாகப் புரிந்து கொண்டால்தான், விவசாயத்தில் ஓரளவேனும் விளைச்சலைப் பெற முடியும். அதேபோல்தான் ஒடுக்கப்பட்ட ஒரு தேசிய இனமானது தன் நிலபரப்பையும், அதைச் சுற்றியிருக்கும் அல்லது அதைச் சார்ந்திருக்கும் தேசங்களின் புவியியல் ரீதியான இயற்கைத் தெரிவுகளை சரியாக புரிந்தால் மட்டுமே, அயலுறவு அரசியலை மதிநுட்பமான வியூகத்துடன் எதிர்காலத்தில் கொண்டு நகர்த்த முடியும்.

யார்...? விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி இந்திய தேசிய நலனில் ஈழத் தமிழரின் அரசியல் பங்களிப்பு கலந்திருப்பது இயற்கை நியதியாகும். அதை படைத்தவனால் கூட மாற்ற முடியாது என்பதை ஈழத் தமிழ் அரசியல் தலைமைகள் தெட்டத் தெளிவாக புரிந்து கொள்வது மிகவும் அவசியமான ஒன்றாகும். போரியல் ரீதியாக ஒரு கோட்பாடு உண்டு. தளம் இருந்தால்தான் களமாட முடியும். அதேபோல்தான் ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் "13" ஆவது திருத்தத்தை தளமாக்கிக் கொண்டு சமஷ்டியை ஜனநாயக ரீதியிலான அகிம்சை வழியில் பிராந்திய அரசான இந்தியாவிடம் இராஜதந்திர வியூகங்கள் ஊடாகப் போராடிப் பெற வேண்டும். முதலில் உண்பதற்கு கோப்பையைக் கேளுங்கள். அதன் பின் சோற்றுக்காக போராடுங்கள். இதுவே ஒடுக்கப்படும் ஒரு தேசிய இனத்தின் அரசியல் பரிமாணங்களின் தலை சிறந்த வளர்ச்சியாகும்.

கட்சிகளும், சின்னங்களும் எங்கு அதிகமாகின்றதோ அந்த தேசத்தில் பிரச்சினை எனும் பூதங்களும் ஒவ்வொன்றாக கிளம்பி விடும். அத்தகைய ஒரு பூதமே ஈழத் தமிழ் அரசியல் பரப்பில் "13" ஆவது திருத்தத்தை மையமாக வைத்து நிகழும் இந்திய எதிர்ப்பு வாதமாகும். இத்தகைய இந்திய எதிர்ப்பு வாதம் என்பது 2009 ஆம் ஆண்டுக்கு முன்னரான ஆயுத அரசியலிலும், 2009 ஆண்டுக்குப் பின்னரான ஜனநாயக அரசியலிலும் நீண்டு செல்வது ஈழத் தமிழ் அரசியல் தலைமைகள் தம் அயலுறவுக் கொள்கையில் தோற்றுப்போன ஒரு நிலைப்பாட்டையே இது எடுத்துக் காட்டுகிறது.

கடந்த கால கசப்பான சம்பவங்களை அரசியலின் பாடமாக்கிக் கொண்டு சிதறு தேங்காய் போல் நான்கு திசைகளிலும் ஒற்றுமையின்றி எங்கும் சிதறிக் கிடக்கும் ஈழத் தமிழ் அரசியல் தலைமைகள் ஒரு குடையின் கீழ் ஒற்றுமையானால் தான் ஈழத் தமிழ் அரசியலின் எதிர்கால நகர்வுகளை கட்சிகளுக்கு இடையிலான விவாதங்கள் இன்றி கொண்டு நடத்த முடியும். அதை விடுத்து சர்வ தேசத்தின் மீதும், இந்தியா மீதும் குற்றம் சுமத்துவதில் எந்த நன்மைகளும் ஈழத் தமிழருக்கு எதிர்காலத்தில் விளையப் போவதில்லை. தற்போது ஈழத் தமிழ் அரசியல் தலைமைகள் முன்னால் இருக்கும் பெரும் சவால் என்னவென்றால் தம் அயலுறவுக் கொள்கையை இயன்றளவில் தன் நட்பு சக்தியான இந்தியாவிடம் விஸ்தரிப்பதேயாகும்.

அரசியல் ரீதியாக ஈழத் தமிழர் தன் இயற்கைச் சார்புச் சக்தியான இந்தியாவுக்கு ஒரு களம் அமைத்து கொடுத்தால்தான். ஈழத் தமிழர் மீதான கரிசனை எந்தளவுக்கு உண்மையானது என்பதை அளவிடவும் முடியும்.

இந்தியாவுக்கு, ஈழத் தமிழர்கள் எதுவரை தேவைப் படுகின்றார்கள். அதை புரிந்தால் மட்டுமே ஈழத் தமிழ் அரசியல் தலைமைகள் தம் தீர்வுக்கான தீர்ப்பினை ஓரளவு ஊகித்து அறிய முடியும். பரமசிவனிடம் பிள்ளையார் எப்படி தம் அறிவை ஆயுதமாக்கி மாம்பழத்தை பெற்றாரோ அதே உத்தியைக் கொண்டே நாம் தீர்வெனும் மாம்பழத்தை இந்தியாவிடம் பெற முயற்சிக்க வேண்டும்.

இலங்கையின் பௌத்த ஆட்சியாளர்களை மட்டும் நம்புவதால் எந்த ஆரோக்கியமான முடிவும் நமக்கு கிடைக்கப் போவதில்லை. முருகனுக்காவது பழனிமலை கிடைத்தது. ஈழத் தமிழருக்கு எதிர்காலத்தில் குடும்பி மலை கூட கிடைக்குமா..? என்பதை ஈழத் தமிழ் அரசியல் தலைமைகள் உணர்ந்தாக வேண்டும்.

**சாம்-ரமேஷ்குமார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீட்பர் கிறிஸ்து சிலை (பிரேசில்)



பிரேசில் மீட்பர் கிறிஸ்து சிலை

கேரபெம் ப்ருவர் வெளியிட்ட இடைக்கால உலக அதிசயங்கள் பட்டியலிடப்பட்டு 150 வருடங்கள் கடந்து விட்டதாலும், இதுவரை தனிநபர்களே இவ்வாறான பட்டியல்களை தயாரித்து வந்தனர் என்பதாலும் கனடா நாட்டைச் சேர்ந்த பெர்னார்ட் வெப்பர் 1999 இல் ஜனநாயக ரீதியான வாக்கொடுப்பு நடத்தி புதிய பட்டியல் ஒன்றை உருவாக்கத் திட்டமிட்டார்.

இதற்காக 2001 ஆம் ஆண்டு ஒரு அமைப்பை நிறுவினார். இதன் மூலம் உலகெங்கிலும் உள்ள அதிசய இடங்கள், உருவச்சிலைகள், கட்டடங்கள் பற்றிய தகவல்கள் போட்டியில் பங்குபெற இணையத் தளம் வழியே வரவேற்கப்பட்டு, 200 இடங்கள் முதல் சுற்றில் வரைவு செய்யப் பட்டன. பின் அதிலிருந்து 70 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு இறுதிச் சுற்றில் வாக்கொடுப்புக்கென 21 இடங்கள் அறிவிக்கப்பட்டன.

கடுமையான போட்டிக்குப்பிறகு இறுதியாக வாகெடுப்பில் 7 இடங்கள் தேர்வு செய்யப்பட்டன. சிச்சென் இட்சா, கொலோசியம், தாஜ்மகால், சீனப்பெருஞ் சுவர், மீட்பர் கிறிஸ்து சிலை, பெட்ரா, மச்சு பிச்சு ஆகியன தேர்வாகின. இந்த வாக்கெடுப்பு அறிவியல் பூர்வமாக இல்லை என்று ஐ.நாவின் பாரம்பரிய கலை பொக்கிஷங்களை பாதுகாக்கும் யுனெஸ்கோ அமைப்பு ஏற்கவில்லை. என்றாலும் உலக நாடுகள் பெரும்பாலானவை ஆர்வமுடன் வாக்கெடுப்பில் கலந்து கொண்டன. புதிய உலக அதிசயங்கள் பட்டியலில் இடம்பெற்ற சிச்சென் இட்சா, சீனப்பெருஞ்சுவர், கொலோசியம், தாஜ்மகால் ஆகியவற்றை பற்றி இந்த கட்டுரைத் தொடரில் ஏற்கனவே பார்த்துவிட்டோம் என்பதால் புதிதாக இடம் பிடித்த மீட்பர் கிறிஸ்து சிலை பற்றித் தெரிந்து கொள்வோம்.

பிரேசிலில் உள்ள கர்கோவடோ மலைத்தொடரில் டைஜீரா வனப்பகுதியில் அமைந்திருக்கும் பிரேசில் தேசிய பூங்காவில் மீட்பர் கிறிஸ்து சிலை அமைக்கப்பட்டுள்ளது. "கர்கோவடோ" என்றால் "கூன் முதுகு" என்று போர்த்துக்கீசிய மொழியில் அர்த்தம்.

1859 ஆம் ஆண்டில் கர்கோவடோ மலைப்பகுதிக்கு வந்த கிறித்துவ மதப் போதகர் பெட்ரா மரியா பாஸ் என்பவருக்கு அதன் உச்சியில் மிகப்பெரிய நினைவுச் சின்னம் அமைக்க வேண்டும் என்று தோன்றியது. அப்போதைய பிரேசிலை ஆண்ட முதலாம் டாம் பெட்ரோவிடம் இந்த கோரிக்கையை முன்வைத்தார். மகாராணி இசபெல்லின் நினைவிடமாகவும் அது இருக்கலாம் என்று ஆலோசனை கூறினார்.

மன்னனுக்கு இந்த யோசனை பிடித்திருந்தது. அந்த மலையில் சாதாரணமாக ஏறிச்செல்வது கடினம் என்பதால் பிரேசிலில் குடியேறி இந்த போர்த்துக்கீசியர்கள் 'சோதனையின் உச்சம்' என்று ஒரு காலத்தில் அதற்கு பெயரிட்டிருந்தனர். எனவே மேலே ஏறிச் செல்ல போக்குவரத்து வசதியை முதலில் ஏற்படுத்த வேண்டும் என டாம் பெட்ரோ நினைத்தார். 3800 மீற்றர் செங்குத்தாக இருந்த அதன் பாதையில் புகைவண்டி செல்ல தண்டவாளங்கள் போடும் பணி தொடங்கப்பட்டது.

மிக மெல்ல நடந்த அதன் பணிகள் அவரது மகன் இரண்டாம் பெட்ரோ காலத்திலும் தொடர்ந்து ஒரு வழியாக 1921 இல் பயன்பாட்டுக்கு வந்தது. பிரேசிலில் உள்ள கத்தோலிக்க மக்கள் அந்த மலையின் உச்சியில் இயேசு கிறிஸ்துவின் சிலை ஒன்றை நிறுவ வேண்டும் என முடிவெடுத்து அந்த சிலை எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான உத்தேச ஓவியத்தை வரையும் போட்டி ஒன்றை அறிவித்தனர். (தொடரும்...)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2511

### விதுசா


நம்ம வீட்டில ஆயிரம் பிரச்சினைகள் இருந்தாலும்...



பக்கத்து வீட்டுல சின்ன பிரச்சினைன்னாலும் நம்ம கவலை எல்லாம் அங்கேதான் போகுமோ..

### மிதுன்

மாட்டை அடக்கும் வீரனுக்கு பரிசாக கார், பைக் தர்றது போல




மனைவியை அடக்கும் மாவீரனுக்கு பஸ்ஸோ, லாரியோ தருமாறு கேட்டுக்கொள்கிறேன் யுவரானர்.

### நவீன்

வாழ்க்கையில நாம இந்த பக்கமா ஒரு பிரச்சினையை சுருட்டி முடிச்சா

இன்னொரு பிரச்சினை நமக்கு பின்னாடியே சுத்தி சுத்தி வரும்.



### தாரணி

போய் எருமை மேய்.. அப்பத்தான் உனக்கு புத்தி வருமுன்னு டீச்சர் சொன்னாங்க..



நீங்க இவ்வளவு அறிவோடு இருக்கீங்களே.. எத்தனை எருமை மேய்சிங்கன்னு கேட்டதுக்கு... வெளிய நிக்க வச்சிட்டாங்க...

### சுரேக்கா

அதுவா வளரும் போது காசு குடுத்து வெட்டுறோம்...



அதுவா கொட்டும் போது காசு குடுத்து வளர்க்கிறோம்... தலைமுடி

### ஹர்சன்

பாட்டி முந்தானையில் முடிந்த காசு வாங்கும் மகிழ்ச்சி...



இப்ப ஏடிஎம்மில் ஆயிரம்... ஆயிரமாக எடுத்தாலும் அந்த சந்தோஷம் தருவதில்லை.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

278

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## எமது பாரம்பரிய நடைமுறைகள் மெருகேற்றப்பட...

எமது கலாசாரங்களும் பண்பாடுகளும் காலத்திற்கு காலம் மெருகேற்றப்பட்டு மேலைத்தேய நாடுகளால் கூட மதிக்கப்படுகின்ற ஒரு உன்னத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. இது மனிதனின் உடல், உள ஆரோக்கியத்திற்குக் கூட உறுதுணையாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது.



இருந்த பொழுதும் எமது சில பாரம்பரிய நடைமுறைகள் எமது மக்களின் மனநிலையிலும் உள ஆரோக்கியத்திலும் பாரதூரமான தீயதாக்கங்களை ஏற்படுத்தியிருப்பதுடன் பெண்களின் சமத்துவ உரிமைகளையும் பாதித்து நிற்கின்றது.

உதாரணமாக ஒருவரின் மரணச்சடங்கின் பொழுது பாரிய மன வேதனையில் இருக்கும் அவரின் மனைவியை அவரின் உடலை சுற்றிவரச் செய்து தாலிக் கொடியை கழற்றி போடச் சொல்லும் ஒரு சம்பிரதாயமும் பொட்டு, பூ என்பவற்றை அகற்றச் சொல்லும் ஒரு சம்பிரதாயமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இது வேதனையில் துவண்டிருக்கும் அந்தப் பெண்ணுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் பெரும் மனத்தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது. மனைவியின் இழப்பின் பொழுது கணவன் அனுபவிக்காத பல இடர்பாடுகளை கணவனின் இழப்பின் பொழுது மனைவி எதிர்கொள்ளும் ஒரு துர்ப்பாக்கிய நிலை இருந்து வருகிறது. ஒரு மனிதனின் இறப்பின் பொழுது அந்த துயரத்திலிருந்து அந்தக் குடும்பத்தினர் மீள்வதற்கான சில புதிய பாரம்பரிய முறைகளை நாம் மெருகேற்றிக் கொள்ள முடியும். ஆனால் மரணச் சடங்கின் பொழுது பெருந்துயருற்றிருக்கும் மனைவியை தாலியை கழற்றி இறந்தவரின் உடல் மீது போடுமாறு கேட்டுக் கொள்வதோ அல்லது அங்கே வைத்து பூவையோ பொட்டையோ அகற்றுமாறு கேட்டுக் கொள்வதோ மனிதத்துவப் பண்பு ஆகாது. இது பல உளவியல் தாக்கங்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றது.

சமய, சமூக பெரியவர்கள் எமது இந்த நடைமுறைகளை தவிர்த்துக் கொள்வதற்கு தமது பெரும்பங்களிப்பை ஆற்ற முடியும். காலத்திற்கு ஏற்றாற் போல் எமது பாரம்பரிய நடைமுறைகள் மெருகேற்றப்படுவது அன்று தொட்டு நடைபெற்று வருகிறது. எனவே இவ்வாறான நடைமுறை மாற்றங்கள் ஒரு தவறான காரியம் என்று கொள்ளப்பட மாட்டாது.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

## மழை நீரே குடிப்பதற்கு அதி சிறந்த நீர்

சூரியக் கடவுளின் சத்தியினால் சுத்திகரிக்கப்பட்டு எங்கும் பொழியும் மழை நீரே குடிப்பதற்கு அதி சிறந்த நீர் என உலகில் நடத்தப்பட்ட எல்லா ஆராய்ச்சிகளும் உறுதி செய்து வருகின்றன.

கிணற்று நீர், ஆற்று நீர், போத்தலில் அடைக்கப்பட்டு வரும் நீர், சாதாரண கொதித்து ஆறிய நீர் என எல்லா வகையான நீருடனும் ஒப்பிடும் பொழுது மழை நீரே குடிப்பதற்கு அதிகூடிய பாதுகாப்பான நீர் என்பது ஐயம் திரிபற நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

நீரில் கரைந்திருக்கும் பல இரசாயனப் பதார்த்தங்களும் கனி உப்புக்களும் பல ஆபத்தான நோய்களுக்குக் காரணமாக அமைகின்றன. மழை நீரில் இவ்வாறான ஆபத்தான இரசாயனப் பொருள்களோ கனியுப்புக்களோ இல்லை. எனவே மழைநீரை அருந்துவதன் மூலம் பல சிறுநீரகம் சம்பந்தமான நோய்கள், புற்று நோய்கள், தொற்று நோய்கள், குடல் சம்பந்தமான நோய்கள் போன்ற பல கொடிய நோய்களிலிருந்து எம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். நீரை கொதிக்க வைப்பதன் மூலம் நீரில் கரைந்துள்ள இரசாயனப் பொருள்களையோ கனியுப்புக்களையோ அகற்ற முடியாது. வடிகட்டும் செயன் முறை மூலமும் இவற்றை முற்றாக அகற்றி விட முடியாது. எனவே நாம் மழை நீரைச் சேமித்துக் குடி நீராகப் பாவிக்கும் நடைமுறையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

மழை நீரைக் குடி நீராகப் பாவிக்கும் பழக்கத்தை ஊக்குவிப்பதற்குப் பலதரப்பினாலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த முயற்சிகளுக்கு மக்களிடையே கிடைக்கும் ஆதரவும் ஊக்கமும் போதுமானதாக இல்லை. இதற்கான காரணங்கள் ஆராயப்பட வேண்டும். இது சம்பந்தமான விழிப்புணர்வு மக்களிடையே ஏற்பட வேண்டும்.

வீடுகளிலும் பொது இடங்களிலும் பாடசாலைகளிலும் மழை நீர் சேமிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து இதனைக் குடி நீராகப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org